
# ஜீவ மன்னா




அனுதினமும்

2013 மார்ச்

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு,
நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்;
நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.
நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு,
நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்.
நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது;
அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

ஏசாயா (53:4,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




அன்பார்ந்தவர்களே! எங்கள் இயேசுக்கிறிஸ்து மரித்தவர்களினின்று உயிர்த்தார் என்பதை ஞாபகப்படுத்தும் இந்த மாதத்தில் தேவன் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதைக் குறித்து எனக்கு சில காரியங்களை ஞாபகப்படுத்துவது நலமென்று தோன்றுகிறது. தேவன் எங்களுக்கென்று உண்மையாகவே மரித்து எமக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். தேவன் சிலுவை மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த வேளையில் மனிதர்கள் தேவனுக்கு ஏளனம் சொன்னதாவது "நீ யூதரின் ராஜாவானால் உன்னை இரட்சித்துக்கொள்" என்றாகும். அப்படியானாலும் அதற்கு தேவன் எவ்வித பதிலும் கூறவில்லை. என்பதற்கு வேதாகமம் சான்று பகருகின்றது.

அன்பார்ந்தவர்களே . யூதர்கள் சிலுவையில் வைத்து ஆணியறைவதற்கு முன் தேவனுக்கூடாக எவ்வளவு வல்லமையான காரியங்கள் நடைபெற்றன.எவ்வளவு வல்லமையான வார்த்தைகள் அவரின் வாயிலிருந்து சொல்லப்பட்டன. மனிதர்களின் ஏளனம் அவமானம்.நிந்தை.கொடூரங்கள். மத்தியில் மௌனமாக இருந்தது பரலோக பிதாவானவரின் சித்தத்தை நிறைவேற்றவே என்பதை நன்கு அறிய முடிகின்றது. இயேசு சுவாமி சிலுவைப்பாடுகளை அனுபவிக்க முன்னர் தனது சீடர்கள் மூன்று பேரோடுங்கூட கெத்சமனே என்னும் இடத்திற்கு வந்து அவர்களைவிட்டு தனியாகச் சென்று பரலோகப்பிதாவை நோக்கி ஜெபிக்கின்ற வேளை "என் பிதாவே இந்தப்பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும் படி செய்யும். ஆகிலும் என் சித்தப்படி அல்ல. உம்முடைய சித்தத்தின் படியே ஆகக் கடவது." என்று கூறினார். அவ் வேளையில் பரத்தில் ஒரு தேவதூதன் இயேசுவுக்கு தென்பட்டு அவர் இயேசுவை தைரியப்படுத்தினார் என்றும் எங்களுக்காக படப்போகின்ற பாடுகளைக் குறித்து இயேசு ஆவியில் கலங்கி ஜெபித்தவேளை வியர்வைத்துளிகள் இரத்தத்துளிகளாக கீழே விழுந்தன என பரிசுத்த வேதாகமத்திலே எழுதப்பட்டுள்ளது.



அன்பார்ந்தவர்களே! தேவன் சாதாரண ஓர் மனிதனாக எலும்புகள். மாமிசம். இரத்தம் உள்ளடக்கிய மாம்ச சரீரமாக இருந்ததை அறியக்கூடியதாக இருக்கின்றது அல்லவா? ஆனாலும் தேவன் சிலுவையில் எங்களுக்காக மரித்து கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் கல்லறை வாசலினருகே கல்லைப்புரட்டி கல்லறையிலிருந்து வெளியே வந்தார். மகதலேன மரியாள் என்பவரும் யாக்கோபின் தாய் மரியாளும் சாலோமே என்பவருடன் கல்லறைக்குச் சமீபமாக வந்து ஏறிட்டுப்பார்கிற போது அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள் என பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. எங்களுக்காக சாதாரண மனிதனாக உலகில் பிறந்த தேவனின் மகிமை எவ்வளவு மகத்துவமானது என்பது தெளிவாகின்றது அல்லவா? தேவன் மரித்து உயிர்த்து 40 நாள் முழுவதும் உலகில் இருந்து பல சந்தர்ப்பங்களில் சீடர்களுக்கு காட்சியளித்து தேவன் மரித்தோரிலிருந்து எழும்பி ஜீவனுள்ளவராக இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார். சீடர்களை பெலப்படுத்தி தைரியப்படுத்தி அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் மேகங்கள் சூழ்ந்து அவரை மறைத்துக் கொண்டன.

தேவப்பிள்ளைகளே! நீங்கள் நம் இயேசுக்கிறிஸ்துவைக் குறித்து மனிதர்களுக்கு கூறும் வேளையில் வீண் வார்த்தைகள் என மனிதர்கள் குறை கூறுகின்றார்களா? கலங்காதீர்கள்! தேவன் மரித்து மீண்டுமாக எழுந்து மனிதர்களைச் சந்தித்து மேன்மைப் படுத்தியது போல உங்கள் வாழ்க்கையும் தேவனுக்குள் மேன்மைப்படுவதாக. ஜீவனுள்ள தேவன் என்றும் எங்களோடிருப்பாராக!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வ வல்லவரான தேவ பிதாவானவருக்கே



## ஆசிரியர் உரை

தேவப்பிள்ளைகளே,

### நீங்களும் இயேசுவுக்காக ஆத்துமா ஆதாயம் செய்யுங்கள்.

ஜீவிக்கிற இயேசுவின் நாமத்தில் வாழத்துகிறேன். இந்த ஜீவமன்னா தின தியானங்களுக்கூடாக ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு மன்னாவைக்குறித்து வாழ்த்தி அத்தோடு இதை முன்னோக்கி நடத்திச்செல்வதற்கு ஒத்தாசை பெற்றுக்கொடுத்த அனைவருக்கும் மன்னா ஆசிரியரான நான் முழு மனதோடு நன்றி கூறுகிறேன். இந்நவீனமான யுகத்தில் நாங்கள் காண்கின்ற இவ்வுலகமானது பாவத்தில் நிறைந்துள்ளது. களவுகள், சண்டைகள், மது வெறிக்கொள்ளுதல், பெண்கள் கற்பழிப்பு, பாலியல் குற்றங்கள் அத்தோடு தவறின் காரணமாக தூக்குத்தண்டனை அல்லது மரண பரியந்தம் சிறையிருப்பு, புருஷன் மனைவிக்கிடையில் விவாகரத்து ஆகியவைகள் மலிந்து விட்டன. ஆனாலும் நீங்கள் ஆவிக்குரிய தேவ பிள்ளைகளாகையால் இவைகள் அவர்கள் வாழ்வில் நடைபெறுவதற்கு முன்னதாக இயேசு சுவாமியின் அன்பு, இயேசு சுவாமியின் மூலமாக பெற்றுக்கொள்ளும் ஆறுதல் இவைகளைக்குறித்து அறிவித்தால் அவர்கள் வாழ்வினை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் அவர்களை சீர் குலைக்கிற சாத்தானின் ஆட்சிவல்லமை நிங்கி "இயேசுவே" என்று சொல்லுகிற வேளை அவர்கள் இரட்சிக்கப்பட தேவன் வழியைத் திறந்து கொடுப்பார். ஆகையால் புதிய வாசகர்களை எங்களுடைய வேண்டுகோளை ஏற்று அநேகரை அறிமுகப்படுத்தி ஒத்தாசை வழங்கினபடியால் நன்றி. உங்களுடைய கடமைகளான அநேக புதியவர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தல், பின்மாற்றமாகி இருக்கிற ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு இச்சஞ்சிகைக்கூடாக தேவ பெலன், ஆறுதல் பெற்றுக்கொள்ளும்படியாக சஞ்சிகைகளை அவர்களுக்கு கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

இச்சஞ்சிகையை தொடர்ந்து வெளியிடுவதற்கு உங்கள் ஒத்துழைப்பை நல்கும்படியாகக் கேட்கிறேன். அத்தோடு, உங்கள் ஆலோசனைகள், கருத்துக்கள் எங்கள் தின மன்னா தியானங்களுக்கு உகந்ததென்று தோன்றுபவைகளை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். இத்தின மன்னா ஆசிரியர் நான் உட்பட ஊழியர்கள் அனைவரும் இச்சஞ்சிகையை முன்னோக்கிக் கொண்டு செல்ல ஜெபத்தில் ஒத்தாசை வழங்க வேண்டுகிறேன். நன்றி!

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவிற்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
***இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்***

**உள்ளத்தை இயேசுவுக்கு கொடுங்கள்! உலகத்தில் வெற்றி காணுங்கள்!**
**உயிர்த்த இயேசுவை நோக்குங்கள்! உலகில் சமாதானம் பெறுங்கள்!**

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
மார்ச் 01
வெள்ளி

**தேவன் உங்கள் மீது மிகவும் கரிசனை உள்ளவர் !**

இன்றைய வேதவாசிப்பு
அப்போஸ்தலர் 07 - 08

**“அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் ஒரு பொன் மணியும் ஒரு மாதளம் பழமும், ஒரு பொன் மணியும் ஒரு மாதளம்பழமுமாய்த் தொங்குவாதாக.”**(யாத்திராகமம் 28:34)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தினால் இன்றைய தினம் வெற்றியோடு கூடிய நாளாக அமையும்படி பிரார்த்திக்கிறேன். சர்வலோகத்தையும் படைத்து ஆளுகை செய்யும் சர்வவல்லமையின் தேவன் அருபியாய். நம் மத்தியில் செயல்படுகிறவராய் இருக்கிறார். அவரின் வல்லக்கரங்களின் பிடியில் இருக்கிற நாங்கள் எத்தனை அதிர்ஷ்டசாலிகள் என்பதை எண்ணிப்பாருங்கள். இலங்கை தேசத்தில் வசிக்கிற இரண்டு கோடியே மூன்று லட்சம் ஜனங்களின் மத்தியில் இந்த “ஜீவ மன்னா” தினசரி தியான நூலை வாசிக்கும் வாசக நேயர்களே! அவரை விசுவாசிக்கிற அவருடைய சொந்த ஜனங்களாய் இருக்கும்படி வரப்பிரசாதம் பெற்றுக்கொண்டவர்களே! உண்மையிலேயே நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். நாங்கள் இந்த உலகத்தை நோக்கும் போது மனிதர்களின் வாழ்வில் கைவிடப்பட்டவர்களாய் செயல்பட முடியாத பலவீனர்களாய் இருக்கிறார்கள் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள், கவலைகள், நோய்கள், சங்கடங்கள், சவால்கள் இவற்றை சமாளிக்க முடியாதபடி துவண்டு போய் விடுகிறார்கள் ஜீவனுள்ள தேவனை அறிந்த நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை உச்சரித்து உங்கள் வேண்டுதலை ஏறெடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேவாதி தேவன் உங்களுக்கு பதில் கொடுக்கிறவராய் இருக்கிறார். அதி சீக்கிரமாகவே செயல்படுகிறார்.

ஆரம்பத்தில் காணப்படும் தேவனுடைய வார்த்தைகள் மோசேயோடு ஆரோனுடைய ஆசாரிய ஊழியத்திற்குரிய அங்கியின் கீழ்பகுதியில் அமைக்க வேண்டிய அலங்காரத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. ஒரு பொன்மணி ஒரு மாதளம் பழம் ஒரு பொன்மணி ஒரு மாதளம் பழம் என வரிசையாக அமைக்கும்படி தேவன் கூறினார். தேவ சந்நிதானத்தில் நிற்கும் தேவ ஊழியக்காரன் அழகாய், அலங்காரமாய் இருக்கவேண்டுமென பரத்திலிருந்து அந்த ஆடையை நேர்த்தியாய் அமைக்க ஆலோசனை கூறுகிறார். பரத்தில் நிர்மாணிக்கப்பட்டு பூமியில் நிறைவேற்றப்படும் காரியங்கள் மிக ஆச்சரியமானதல்லவா?

தேவபிள்ளைகளே! எம் தேவன் அவரின் பிள்ளைகளாக தெரிந்துக்கொண்ட எம்மைக்குறித்து எவ்வளவு கரிசனையோடு செயல்படுகிறவராக இருப்பார் ஆரோனுடைய அங்கியைப் பார்க்கிலும் உங்கள் ஆத்துமா மிகவும் அருமையானது. மிகவும் பெறுமதி வாயந்தது அவருக்குச் சொந்தமானது, ஆகையால் இறுதிவரை உங்கள் எல்லாவற்றிலும் வெற்றியின் பாதையில் முன்னோக்கி கொண்டு சென்று வெற்றியைப் பெற்றுக்கொடுக்க வல்லவராய் இருக்கிறார், இன்றும் அவர் உங்களுக்கு மிகச் சமீபமாக இருக்கிறார்.



என் அன்புத் தகப்பனே! ஆரோனை தெரிந்துகொண்டவரே, என்னையும் மீட்டவரே. தேவ ஆவியானவரை உள்ளத்தில் வைத்திருப்பவரே! ஆரோனின் அங்கியைப் பார்க்கிலும் என்னையும் என் ஆத்துமாவையும் நேசிக்கிறவரே. இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் என்னை ஆசீர்வதிக்குமாறு பிரார்த்திக்கிறேன். ஆமேன்.

---

நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பது போல உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார்
ஏசாயா 66:22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 02
சனி

**நீங்களும்
இயேசு கிறிஸ்துவை
நேசிக்கிறீர்களா?**

இன்றைய வேதவாசிப்பு
அப்போஸ்தலர்
09 - 10

**"இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்வான்."** (யோவான் 14:23)

தேவனுக்குள் பிரியமானவர்களே! இந்த புதிய நாளின் காலை நேரத்தில் தேவ கிருபையினால் நிறைந்து மகிழ்ச்சியாய் வாழ என் முழு உள்ளத்தோடு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். நீங்கள் இரட்சிக்கபட்டு இருந்தாலும், நீங்கள் பெயர் கிறிஸ்தவர்களாய் இருக்கிறீர்களா? அல்லது மெய்யாகவே தேவனை ஏற்று அவருடைய வழிகளில் ஜீவிக்கும்படி உங்களை அர்ப்பணித்து மெய் கிறிஸ்தவர்களாக ஜீவிக்கிறீர்களா? என்று உங்களை ஆராய்ந்து பாருங்கள். பெயரில் மாத்திரம் கிறிஸ்தவனாக ஜீவிக்கும் அநேகர் இலங்கையிலும் உலகம் முழுவதும் காணப்படுகிறார்கள். ஆனால் மிகச்சிலர் மெய்யாகவே கிறிஸ்தவர்களாக கிறிஸ்துவையே பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். இன்றைய நாள் ஏட்டின் பிரதானவசனம் வெளிப்படுத்துகிறது என்னவெனில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்வான் என்றாகும். தனது பன்னிரண்டு சீடர்களில் ஒருவராய் இருந்த பேதுரு என்பவனிடம் இயேசு யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்று வினாவினார் அதற்கு பேதுரு ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அப்போது ஆண்டவர் என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். இப்படி அவரை நேசிக்கிற இருதயங்களைத் தேடி தன்னுடைய சித்தத்தை செய்ய நினைக்கிற தேவனுக்கு நீங்களும் அருமையான பிள்ளைகளாக இருப்பதால் நீங்கள் அதிர்ஷ்டசாலியே.

தேவபிள்ளைகளே! நீங்கள் தேவனுக்குள் நிலைத்திருங்கள். பெயர் கிறிஸ்தவனாய் இருந்துவிடாமல் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மெய் கிறிஸ்தவனாக ஜீவியுங்கள். தேவன் அவருடைய அளவில்லா அன்பினால் உங்களை நேசிக்கிறார். அநேகர் தங்கள் சொந்த தேவைகள் லௌகீக ஆசீர்வதங்களுக்காய் தேவனை தேடி அவைகள் நிறைவேறியவுடன் அவரை மறந்து தூரமாகி விடுவார்கள். ஆனால் அவரின் அன்பை மாத்திரம் வாஞ்சித்து அவருக்கு தம்மை ஒப்புவித்து அவரின் வார்த்தைகளை கைக்கொண்டு ஜீவிக்கும் கிறிஸ்தவர்கள் அவர்கள் தேவ ஒத்தாசை கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும், அவரினால் தம் தேவைகள் தங்கள் லௌகீக காரியங்கள் நிறைவேறாவிட்டாலும் அவர்களின் இருதயம் தூயவரின் அன்பையே நாடிக்கொண்டிருக்கும். அவரின் விருப்பபடி அவரை மகிமைப்படுத்தி ஜீவிக்கும் ஒரு பரிசுத்தர் அவருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வை நடத்துவார்கள் தேவ கிருபையுடன் கூடிய ஆசீர்வாதம் அர்ப்பணிப்பு, ஆளுகை இவைகளைப் பெற்று ஜெயம் பெற்ற கிறிஸ்தவனாக ஜீவிக்க முடியும் ஒப்புக்கொடுத்து வாழ்பவர்களுக்கு மாத்திரமே. ஆகையால் நீங்கள் தயங்காமல் உங்களை அர்ப்பணம் செய்து இயேசுவின் மெய்யான தேவப்பிள்ளையாக மாறுதலடையுங்கள்.

இந்த இருபத்தொன்பது வருட என் ஆத்மீக வாழ்வில் அவரிடமிருந்து நான் பெற்றுகொண்ட அன்பின் அனுபவங்களை எழுத இந்த ஏடுகள் போதாது. அவரின் அடிச் சுவட்டை பின்பற்றும் எனக்கு எந்த குறையும் இல்லை. நீங்கள் உங்கள் இருதயத்தை ஆத்தும நேசருக்கு ஒப்புக்கொடுங்கள் அவரை முழு உள்ளத்தோடு அன்பு கூறுங்கள். அப்போது உங்கள் வாழ்வை வளமாக்கி செழிப்படையச் செய்யும்படி அவரது அனுக்கிரகம் உங்களை நோக்கிக் கடந்து வரும். இன்றும் ஒரு நல்ல நாள்.



என்னை நேசிக்கும் தேவனே, எனக்காகவே கல்வாரியிலே பலியானவரே, உங்கள் நான் முழு உள்ளத்தோடு நேசிக்கவில்லை என்பதை அறிந்து மிகவும் வேதனையடைகிறேன். உங்களை நேசிக்கும் ஒரு புதிய இருயத்தை எனக்குத் தாருங்கள். இயேசுவின் நாமத்தில் ஆமேன்.

உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்
1 யோவான் 2:17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 03

ஞாயிறு

**ஆபத்து நேரத்தில் கூப்பிடும் எமக்கு நேசரிடமிருந்து வரும் பதில் !**

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்தலர் 11 - 12

**"நான் துயரப்படும் நாளில் உம்மை நோக்கி கூப்பிடுவேன். நீர் என்னைக் கேட்டருளுவீர்."** (சங்கீதம் 86:7)

பிரியமுள்ள தேவ பிள்ளைகளே! அருள் நாதர் இயேசு கிறிஸ்துவின் திருநாமத்தால் இன்றும் ஒரு ஆசீர்வாதத்தின் நாளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். மனிதனுடைய ஜீவியம் நிலையற்றது. இதைக்குறித்து வேதத்தில் காய்ந்துபோகும் புல்லையும், வாடிப்போகும் மலரையும் உதாரணமாக எழுதியிருப்பதை நாம் பிரசங்கி புத்தகத்தில் காணலாம். இப்படி நிலையில்லா மனித வாழ்வை நிலைப்படுத்தி எல்லாவற்றிலும் பாதுகாப்பைப் பெற்று நீடித்த வாழ்வை எமக்களிக்கவல்லவர் சர்வவல்லமையுள்ள ஒரே தேவன் இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிந்துகொண்ட நாங்கள் பாக்கியவான்கள். விலைமதிப்பற்ற வரப்பிரசாதம் பெற்றவர்கள். நாங்கள் மேலே தரப்பட்ட சங்கீதம் 86:7 வசனம் ஆபத்து நாளில் நாங்கள் ஜெபிக்கும்போது தேவன் பதில் கொடுக்கிறார் என்று கூறுகிறது. ஒரு மனிதன் யாரும் அறியாதபடி எமக்கு விரோதமாக எம்மைத்தாக்கும்படி எம்மை அழிக்கும்படி முயலும் சந்தர்ப்பத்தில் எமக்கு உதவிபுரிய யாருமற்றவேளையில் பரத்தை நோக்கி எம் கண்களை ஏறெடுத்து அப்பா பிதாவே சுவாமி என்னைக் காத்து இரட்சியும் எனக் கதறும்போது, சிறு விண்ணப்பம், எமது கண்ணீர் காணும் தேவன் உடனடியாக எமக்கு பதில்கொடுக்க விநாடி பொழுதில் எம்மை விடுவிக்க எமக்கு சமீபமாக வந்து விடுவார். எமக்கு உதவி அனுப்பி எம்மை மீட்டுகொள்வார். கலங்காதீர்கள் தேவன் உங்கள் அருகிலிருக்கிறார். அவர் எந்நேரமும் உங்கள் மீது நோக்கமாயிருக்கிறார். அவரின் ஜீவவார்த்தைகளால் உன் கால்கள் தள்ளாடவொட்டார் உன்னைக் காக்கும் தேவன் உறங்கார் என எமக்கு வாக்குக்கொடுத்துள்ளார். நாங்கள் அவருடைய கண்ணின் கருமணிகள் எனவும் உரைக்கப்பட்டுள்ளது.

என் அருமையான தேவ பிள்ளைகளே! ஆண்டவரை விசுவாசியுங்கள். அவரின் வார்த்தைகள் யாவும் சத்தியம் நீங்கள் அவரை எந்தளவு விசுவாசிக்கிறீர்கள். அவர் அந்தளவு உங்களை கிட்டிச் சேர்வார் தேவப்பிள்ளகைளே! அசீரிய ராஜாவாகிய சனகெரிப் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவிற்கு விரோதமாக யுத்தம் செய்து அரணான பட்டணங்களுக்கு எதிராகப் பாளயமிறங்கி அவைகளை தன்வசமாக்கிக்கொள்ள நினைத்தான். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா தேவனை விசுவாசித்து ஜெபித்து வானத்தை நோக்கி அபயமிட்டபோது கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி அசீரியருடைய பாளயத்திலுள்ள சகல ஒரு லட்சத்து எண்பத்தைந்தாயிரம் பராக்கிரமசாலிகளை கொன்றுப்போட்டார். இவ்வண்ணமாக தேவன் எசேக்கியா ராஜாவை வெற்றியடைய சகாயம் செய்தார். ஆபத்தில் அனுகூலம் செய்து வெற்றியடையச் செய்த தெய்வம் இன்றும் உங்களோடிருக்கிறார். இடைவிடாது ஜெபம் செய்யுங்கள். வெற்றி உங்களுடையதே.



என் அன்புத்தந்தையே நீங்கள் என் ஆபத்து வேலைகளில் என்னை காண்கிறவரும், காக்கிறவருமாய் இருக்கிறபடியால் உங்களுக்கு நன்றி. சாத்தானுடைய கிரியைகளோ, மனிதனுடைய திட்டங்களோ என்னை அழிக்காதபடி என்னைக் காத்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமேன்.

---

உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும் தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்.

சங்கீதம் 22:24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
மார்ச் 04
திங்கள்

# எம் உள்ளத்தின் நினைவுகளை ஆசீர்வாதமாக மாற்றும் கர்த்தர் !

இன்றைய வேதவாசிப்பு
அப்போஸ்தலர் 13 - 14

**"தாவீது தன் வீட்டிலே வாசமாயிருக்கிறபோது, அவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: பாரும் நான் கேதுரு மர வீட்டிலே வாசம்பண்ணுகிறேன் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியோ திரைகளின் கீழ் இருக்கிறது என்றான்."**
(1 நாளாகமம் 17:1)

தேவனுடைய அனுக்கிரகத்தினால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவ ஜனங்களே! இன்றும் நீங்கள் தேவனுக்குள் வளருகிற நல்ல நாளை பெற்றுகொள்ளும்படியாய் ஆசீர்வதித்து இன்றைய இறை செய்தியை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். நினைவுகளின் ஆசீர்வாதத்தை குறித்து பார்ப்போம். ஆண்டவரையே அண்டி உள்ளன்போடு அவரில் பிரியமாய் இருக்கும் விசுவாசத்தைக் கொண்டவர்களின் நினைவில் வரும் காரியங்களை ஆசீர்வாமாக மாற்றுபவர் எம் கர்த்தர். எமது நினைவுகளைக்கூட செயல்படச் செய்யும் தேவனுடைய கிரியை ஆச்சரியமானதல்லவா? எமது சிந்தனைகளை தூரத்திலிருந்து அறிந்து அதை ஆசீர்வாதமாக மாற்றித் தரும் பரமனுடைய அநாதி தீர்மானத்தின்படி எம்மை அவருடைய புத்திரராக புத்திரிகளாக சகல மனுஷர்கள் மத்தியில் தெரிந்துக்கொண்டது எமது பரம சிலாக்கியமே ஆகும்.

தேவபிள்ளைகளே! இந்த நாளிதலின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட திருவசனம் 1 நாளா 17:1 இல் தாவீது ராஜா தன் ராஜமாளிகையில் அமர்ந்து அதன் அலங்காரம் வடிவமைப்பு, சௌகரியங்களை அவற்றை நினைத்துப்பார்த்தான். அதே நேரத்தில் அவனுடைய உள்ளத்தில் இஸ்ரவேலரின் சேனைகளின் கர்த்தரைக் குறித்து அன்பு, பிரியம் அதிகமாயிருந்தபடியால் ஐயோ நான் இந்த அலங்காரமான அரண்மனையில் வாழ்கிறேனே, என்னை இவ்வளவாய் உயர்த்திய தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி அவர் வாசம் பண்ணும் அந்த உடன்படிக்கை பெட்டி திரைகளின் கீழ் இருக்கிறதே. நான் தேவனுக்கு ஒரு ஆலயத்தை உருவாக்க வேண்டும் என சிந்தனையில் ஒரு எண்ணம் ஏற்பட்டது. அருகிலிருந்த நாத்தான் தீர்க்கதரிசியிடம் இதைக்குறித்து பாரும் நான் கேதுரு மர வீட்டிலே வாழ்கிறேன் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி திரைகளின் கீழே இருக்கிறதே என சொல்லியிருப்பான். மனிதர்களுடைய செய்கைகளுக்கு மாத்திரமல்ல, சிந்தனைகளுக்கும் புள்ளிகளை அளிக்கும் தேவன் தாவீது ராஜாவின் சிந்தனைக்கும் அதிக புள்ளிகளை அளித்தார். அவர் மீது அவன் கொண்ட நேசத்தினால் விரும்பிய அந்த ஆலயத்தைக் கட்டும் விருப்பத்தை அவனால் நிறைவேற்றப்படாவிட்டாலும் அவனுடைய மகனை அந்த ஆலயத்தைக் கட்டுவான் என்றும் அவன் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன் என்றும் பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த நாமத்தை உண்டாக்குவேன் என்று வாக்கு கொடுத்து அதை நிறைவேற்றினார்.

பிள்ளைகளே! தாவீது ராஜாவின் சிந்தனைகளைப்போல் உங்கள் சிந்தனைகளும் நன்மையானவைகளாய் உகந்தவைகளாய் இருந்தால் தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பார். தாவீது ராஜாவை ஆசீர்வதித்த கர்த்தர் இன்றும் ஜீவனுள்ளவராய் இருக்கிறார். வெற்றியின் நாள்.



நேச தந்தையே! எங்கள் சிந்தனைகளை தூரத்திலிருந்து அறிகிறவரும் அதை ஆசீர்வதிக்கிறவரும் நீங்களே தாவீதின் விருப்பத்தை நிறைவேற்றினீரே. என் மனவிருப்பங்களையும் உகந்ததாக மாற்றி என் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துங்கள் ஆமேன்.

---

மனுஷர் பார்க்கிறபடி நான் பாரேன் மனுஷர் முகத்தைப் பார்ப்பான்.
கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறார் என்றான்.
1 சாமுவேல் 16:7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 05

செவ்வாய்

**கர்த்தரையே நம்பி சீயோன் பர்வதமாக அசையாமல் நிலைத்திருப்போம் !**

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்தலர் 15 - 16

**"கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தை போல் இருப்பார்கள்."** (சங்கீதம் 125:1)

கிறிஸ்து இயேசுவின் இணையற்ற அன்பினால் அணைக்கப்பட்ட என் அன்பு தேவபிள்ளைகளே, இன்றைய நாளிலும் அருள்நாதர் இயேசுவின் ஆசீர்வாதம் உங்கள் மத்தியில் கடந்து வரும்படி பிரார்த்திக்கிறேன். "ஜீவ மன்னா" நூலின் வாசகர்களாகிய நீங்கள் யாவரும் வாசகர்கள் மாத்திரமல்ல இந்த குறுகிய காலத்திற்குள் இந்நூலினூடாக நித்திய தேவனைக்குறித்து அறிந்து அவரை விசுவாசித்து, அன்பு கூர்ந்து பரிசுத்த வழியில் நடக்கும் நீங்களனைவரும் பேறுபெற்றோர். பரிசுத்த யோவான் 1:12 ன்படி நீங்கள் தேவனுடைய பிள்ளைகள். இதை விசுவாசியுங்கள். பரமனுடைய பிள்ளைகளாக எம்மை மாற்றுவது மத தர்மங்கள் ஏற்றுக்கொள்வதினாலல்ல. பரத்திலிருந்து கிரியை செய்யும் மகத்துவமானவர் பரலோக பிதா அவருக்கு தேவை என எண்ணி இரண்டு கோடி மூன்று இலட்சம் இலங்கை வாழ் ஜனங்கள் மத்தியில் தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே எம்மை அவருக்கென அவருடைய பிள்ளையாக தெரிந்துக்கொண்ட அந்த விசேஷித்த சித்தத்தினால் நாம் அவருடைய பிள்ளையாக இருக்கிறோம். இது பரம சலாக்கியம். அதேப்போல் இந்த தினசரி தியான நூலை நிர்மாணித்து உங்கள் கைகளில் கிடைக்கசெய்வதும் அவரது சித்தமே ஆகும்.

தேவபிள்ளைகளே! தேவனையே விசுவாசித்து அவரை சார்ந்திருப்போர்களின் சகல காரியங்களையும் அவரே நடத்துவார். எம் சகல தேவைகளும் அவரால் நிறைவு செய்யப்படும். எம்மீது உள்ள அக்கறையினால் யாவற்றையும் நேர்த்தியாய் சரியான வேளையில் செய்து முடிப்பார். சங்கீதம் 125:1 வார்த்தைகளின்படி கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள். அவரையே நம்பும் உங்கள் வாழ்க்கை எத்தரத்தில் இருப்பினும் ஏழையாயினும், கல்வியறிவில் குறைந்தவராயினும், தள்ளப்பட்டவராயினும், போராட்டங்களுக்கு மத்தியில் தத்தளிப்பராய் எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாக மாறி வாழ்வு நிலைதடுமாறி போயிருந்தாலும் கலங்காதிருங்கள். உங்களை அசையாது நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் நிற்கச்செய்ய வல்லவர். நீங்கள் நம்பும் கர்த்தர் உண்மையுள்ளவர்.

அதிபதிகளையும், பிரபுக்களையும் நம்பிச் சார்ந்திருப்பதைப் பார்க்கிலும் உங்கள் தேவனானவர் மீது விசுவாசமாயிருந்து நம்பிக்கையாயிருங்கள். பிரதிபலன் எதிர்பாராது எம்மை நேசிக்கும் எமது பரலோகத் தகப்பன் தனது நிறைவான ஆசீர்வாதங்களை அளிப்பார். தமது சிறகால் நம்மை மூடிக்காத்து நடத்துவார். உங்களைப் பெலப்படுத்தி காத்தருளுவார். ஜெயத்தின் நாள்.



என் நம்பிக்கையும் கேடகமுமானவரே என் கன்மலையே உங்களையே விசுவாசிக்கும் என்னை உங்கள் வல்லமையில் நிரப்பி எனக்கு விரோதமாய் வரும் எல்லா சவால்களையும் வெற்றி பெறும்படியாய் உங்கள் அநுக்கிரகம், ஆசீர்வாதத்தை கட்டளையிடுங்கள்

---

நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள் அக்கால முதற் கொண்டு நான் அதை உனக்கு விளங்கப்பண்ணினதும் முன்னறிவித்ததும் இல்லையோ? இதற்கு நீங்களே என் சாட்சிகள் என்னைத் தவிர தேவனுண்டோ வேறொரு கன்மலையும் இல்லையே ஒருவனையும் அறியேன்.

ஏசாயா 44:8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
மார்ச் 06
புதன்

**உங்களுக்குரிய ஆசீர்வாதத்தை உங்களுக்கே தரும் தேவன் !**

இன்றைய வேதவாசிப்பு
அப்போஸ்தலர் 17 - 18

**"ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தான். அவன் சிவந்த மேனியும் அழகிய கண்களும் நல்ல ரூபமுள்ளவனுமாயிருந்தான். அப்பொழுது கர்த்தர் இவன் தான் நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு என்றார்."** (1 சாமுவேல் 16:12)

தேவகிருபையால் தேவனுக்கு பிரியமுள்ள ஜனங்களாக அழைக்கப்பட்ட தேவபிள்ளைகளே தேவனுடைய புதிய கிருபை பொழியப்படுகிற இந்த சூரிய உதயத்தில் உங்களை வல்லமையுள்ள இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன். சர்வ வல்லவரின் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு பரலோக வாசிகளாக மாற்றப்பட்ட யாவரும் உயர்ந்தவர்களே. உலக ஞானத்தினாலல்ல தேவ கிருபையால் உன்னதத்தின் ஆவியால் ஞானத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அதிவிசேஷித்தவர்களே ஏனெனில் எகிப்தின் ராஜா பார்வோன் யோசேப்பை நோக்கி "தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல் வேறொருவன் உண்டோ எனக் கூறியது அவரில் காணப்பட்ட ஆவியாவனரின் ஞானத்தினால் அல்லவா?

1சாமுவேல் 16:18 வசனம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு இராஜாவாக கர்த்தர் தாவீதைத் தெரிந்துக்கொண்டதை வெளிப்படுத்துகிறது. இஸ்ரவேலின் இராஜாவாக நான் தெரிந்துகொண்டவனை அபிஷேகம் செய் என தேவன் கட்டளையிட்டார். அவருடைய வார்த்தையின்படி பெத்லகேமுக்கு ஈசாயின் இடத்துக்கு போனார். அங்கே தாவீது இருக்கவில்லை அவனுடைய சகோதரர்கள் ஏழு பேரை அவர்களுடைய தகப்பன் ஈசா கடந்து வரும்படி செய்தார் அவருக்கு தன்னுடைய ஒரு மகன் தாவீது அங்கு இல்லாதது நினைவில் வரவில்லை ஆனால் இந்த ஏழ பேரில் ஒருவனையும் தேவன் தெரிந்துகொள்ளவில்லை. ஆகையால் சாமுவேல் உன் பிள்ளைகள் இவ்வளவு தானா என ஈசாயிடம் கேட்டான். அப்போது தான் தன் இளைய மகன் ஆடு மேய்ப்பது நினைவுக்கு வந்தது அதை கூறியவுடன் அவனை அழைத்து வரம்படி சாமுவேல் தீர்க்கதரிசி கூறினார். தாவிது அழைத்துவரப்பட்டபோது தேவனுடைய வார்த்தைகளின்படி அவன் இஸ்ரவேலின் ராஜாவாக தீர்க்கதரிசி சாமுவேலினால் அபிஷேகம் செய்யப்பட்டான்.

தேவபிள்ளைகளே! தாவீதின் சகோதரர்கள் ஏழு பேரும் சரீரபலமுள்ளவர்கள் வீரியமிக்கவர்களாய் அழகுள்ளவாகளாய் இருந்தபோதும் தேவன் அவைகளைப் பார்க்கவில்லை. அவர்களை ராஜாவாக மாற்றவில்லை. ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த தாவீதையே ராஜாவாக தேர்ந்தெடுத்தார். அதேப்போல் எமது தேவன் எமக்கென்று நியமித்தள்ள எல்லா ஆசீர்வாதங்களையும் ஏற்ற வேளையில் உங்களைத் தேடி வரும். அதை மற்றவர்கள் சொந்தமாக்கிக் கொள்ள இயலாது. இன்று நீங்கள் நிற்கும் நிலை எதுவோ அப்படியே இருங்கள் இருப்பதில் திருப்தியும் மகிழ்ச்சியும் அடையுங்கள் தேவனுக்கு நன்றி கூறி முறு முறுப்பு புலம்பலை அகற்றி மனரம்மியமாக ஜீவியுங்கள். உங்களை உயர்த்தவும், ஆசீர்வதிக்கவும் தேவன் அறிவார் தகுந்த வேளையில் உங்களை மலைகளுக்கு மேலாய் உயரச் செய்வார். உங்களுக்கு உரிமையான எல்லா ஈவுகளையும் உங்களுக்கு கிடைக்கச் செய்யும்படி தேவன் உங்களோடு இருக்கிறார். இன்னுமொரு நல்ல நாள்.



எங்களை ஆசீர்வதித்து உயர்த்த வல்ல வல்லமையின் தேவனே சகல நன்மைகளினால் ஆசீர்வதித்து நிலை நிற்கச் செய்பவரே. என்னை நோக்கி வரும் ஆசீர்வாதங்களை தடை செய்ய எத்தனிக்கும் சகல தடைகளையும் நீக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

---

நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவி கொடுக்கும்போது
இப்போது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்.
உபாகமம் 28:2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 07

வியாழன்

## எம்மைக்குறித்து இறைவனின் உயர்ந்த சித்தமும் யோசனையும் !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்தலர் 19 - 20

**"பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது."** (ஏசாயா 55:9)

காருண்யத்தின் தேவனின் கிருபையால் எமக்கு கிடைக்கப் இந்த புதிய நாளிலே அவருடைய ஜனங்களாகிய உங்களை வல்லமையான இயேசு நாமத்தினால் வாழ்த்துகிறேன். நீங்கள் இப்புவியில் ஜனித்த நாள் முதல் இன்று வரை நீங்கள் விசவாசிக்கும் பரம தகப்பன் உங்களை கண்மணிப் போல் காத்து முன் நடத்துவதால் நீங்கள் பாக்கியசாலிகள். தேவன் எம்மை தெரிந்துக்கொண்டபடியால் நாம் இப்பதவியை பெற்றுகொண்டோம். மனிதனுடைய சரீரத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு இன்னுமொரு மனிதன் உபகாரம் செய்யலாம். அதன்மூலம் நன்மையடையலாம். ஆனாலும் ஆத்துமாவில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு விடுதலை கொடுக்க மனிதனால் கூடாது. தேவனால் மாத்திரமே ஆத்துமா வாழ்ந்து சுகமாயிருக்கும்படி செய்ய முடியும். அவரே எமக்கு எப்போதும் உபகாரம் செய்கிறவர். நினைப்பதற்கு மேலாய் எமக்கு காரியங்களை பெற்று தர கிரியை செய்கிறார்.

நினைப்பதற்கும் ஜெபிப்பதற்கும் அதிகமாக செய்யும் யெகோவா தேவன் எங்களோடிருக்கிறார். எனது ஆரம்ப ஊழியத்தின் காலத்தில் ஒரு மோட்டார் வண்டியை எனது சிறு சேமிப்பில் வாங்க முயற்சி செய்துக்கொண்டிருந்தேன். அந்தப்பணத்திற்கு புதிய வண்டி வாங்க முடியாதபடியால் பாவித்த வண்டியை வாங்கும்படி முயற்சித்த எனக்கு மிகவும் பழைய வண்டியையே வாங்கக்கூடியதாக இருந்தது. ஆனால் என்னுடைய ஆத்மீக தகப்பனுடைய சபையில் இருந்த ஒரு சகோதரர் மூலமாய் ஒரு புதிய வண்டியை பெற்றுக்கொள்ளும் படியாய் தேவன் கிருபை செய்தார். என்னிடமிருந்த ஒரு சிறு பணத்தொகை மூலமாக ஒரு புத்தம் புதிய வண்டியை எனக்குத் தந்தருளினார். எனக்கு மாத்திரமல்ல உங்களுக்கும் அவர் அப்படியே செய்ய வல்லவராயிருக்கிறார். அவரை விசுவாசிக்கும் சகலருக்கும் நினைத்துக்கூட பார்க்க முடியாத வகையில் சகாயம் புரியும் கர்த்தர் இயேசுவே.

தேவபிள்ளைகளே! நாம் எமது கையிருப்பில் உள்ள பணத்திற்கு மேல் பெருமதி வாய்ந்த பொருளை வாங்க எத்தனிப்பதில்லை. ஆயினும், நாம் விசுவாசிக்கும் இறைவன் இயேசுவின் கரத்தில் அதை ஒப்புவித்து ஜெபித்து சிறு தொகையை நாம் பாவிக்கும்போது அதை ஆசீர்வதித்து பெருகப்பண்ணி நாம் நினைப்பதற்கு மேலான காரியத்தை எமக்கு வாய்க்கப்பண்ணுவார். அவருடைய சித்தம் அவருடைய யோசனைகளை அணுக எம்மாலே ஆகாது அத்தனை உயர்ந்தது, அவருடைய சித்தமும் யோசனையும் உங்கள் தேவனானவர் மிகவும் வல்லவர் தேவனை விசவாசிக்கும்நீங்கள் பாக்கியம் பெற்றோர். உங்களுக்கு நல்ல நாள்.!



உன்னதமான தேவபிதாவே! நீங்கள் என்னைக்குறித்து வைத்திருக்கும் சித்தம் பெரியது. என் சித்தம் என் யோசனைகளை தள்ளி என்னை உங்கள் கரத்தில் ஒப்புவிக்கிறேன். என்னை உயர்த்தியுருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமேன்.

---

இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும் படிக்கு அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவி கொடுப்பாயானால் உன் தேவனாகிய கர்த்தர் பூமியின் சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்

உபாகமம் 28:1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபத்திரவத்தின் வேளையில் எம்மை கை நெகிழவிடாத தெய்வம் !



**“உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாய் எண்ணாமலும் அருவருக்காமலும் தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்.”**(சங்கீதம் 22:24)

உன்னதமான தேவன் இயேசு ராஜாவின் இன்ப நாமத்தினால் என் பிரியமான தேவ ஜனங்களே! உங்களை இந்த இனிய காலைப்பொழுதிலே வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன். இன்றைய நாள் வெற்றியின் நாளாய் இருக்கட்டும் மனிதனுடைய ஆத்துமாவோடு ஜீவனுள்ள தேவனுடைய ஆத்துமா இணையும் போது மனிதனுடைய சிறிய மூளைக்கூடாக அதிவிசேஷித்த ஆச்சரியமான பெரியக்காரியங்களை திட்டமிடச் செயல்படுத்த, நிர்மாணிக்க, வழிநடத்த தேவ கிருபை கிடைக்கும். உலகத்தின் நடைமுறை காரியங்கள் யாவும் துரித வேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும்போதும். பெரும் இராச்சியங்கள் கூட சந்திக்கும் சவால்களுக்கு முகங்கொடுத்து சமாளிக்க முடியாதபடி தடுமாறி தத்தளித்துக்கொண்டிருப்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. ஆயினும் உலகிலேயே மிகப் பெரிய பிரச்சினைக்கு பதில் தல வல்லவர், ஒரு வார்த்தையில் விடுவிக்க வல்ல சர்வ வல்லமையின் பிதாவானவர் எங்களோடு வாசம் பண்ணகிறபடியால் சகல ஜனங்களில் நாங்கள் பாக்கியவான்கள்.

இறைவனின் பிள்ளைகளே, உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். ஆயினும் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்க நேரிடும் பாரதூரமான பிரச்சினை வேளையில் இயேசு சுவாமி கூறியபடி எனக்கு தைரியமாக இருக்க முடியவில்லையே எனது பிரச்சினை எவ்வளவு பெரிதாயிருக்கிறதே என்று எண்ணவேண்டாம். எனது இருபத்தொண்பது வருட ஊழிய வாழ்க்கையில் நான் கண்ட அனுபவம் எமக்கு வரும் உபத்திரவங்கள் எம் வாழ்வில் நேரிடுவது தேவன் எமது வாழ்க்கையில் ஒரு மாறுதலை ஒரு புதிய காரியத்தை செய்ய ஆரம்பிக்கும் போதே ஆகும். ஆகையால் ஆத்மீக பிள்ளைகளாகிய நீங்கள் வாழ்வில் சந்திக்கும் சகல துன்பத்தின் காரியங்களிலும், பிரச்சினை வேளைகளிலும் கலக்கமடையாதிருங்கள். பிள்ளைகளே! கடந்த சில வாரங்களுக்கு முன்பதாக ஒரு பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிட்டபோது அதனை குறித்து தேவனிடம் மன்றாடியபோது “டொப் டைம்” என்னும் நிகழ்ச்சிக்கு ஆங்கில பாஷையில் விளம்பரம் சொல்லப்படும் வார்த்தை நினைவுக்கு வந்தது “மிகவும் இக்கட்டான் சூழ்நிலைக்கு முகங்கொடுக்கப்போகும் சந்தர்ப்பம்” என்பது போல் நானும் இப்போது வாழ்வில் மிகவும் இக்கட்டில் இருக்கிறேனே, என இருதயத்தில் சோர்வுற்றிருந்தேன்.

சிறிது நேரத்தின் பின் This may be your tough time. But, this is your top time. என்னும் ஒரு குரல் என்னுடைய இருதயத்தில் கேட்டது top time என்பது என்ன அர்த்தம் என நான் யோசித்தேன். எமது ஊழியம் தற்போது உயர்ந்த நிலையில் செயல்பட்டு வருகிறது. அதுவே இந்த வழி Top time என கண்டுகொண்டேன். அதுபோல் உங்களுடைய ஆத்மீக, லௌகீக வாழ்க்கையில் நெருக்கமான சூழ்நிலை Tough time வரக்கூடும் ஆயினும் தைரியமாயிருங்கள். காரிருளில் பேரொளி தோன்றச் செய்யும் தேவன் நம்மோடிருக்கிறார். இன்னுமொரு ஜெயத்தின் நாள்!



**என் அன்புத்தகப்பனே உபத்திரவேளையில் என்னை கைவிடாதவரும் எனக்கு நேரிடும் எல்லா இக்கட்டுகளையும் அறிபவரே என் ஆபத்து வேளையில் காத்தருளும். இயேசுவின் நாமத்தினால் ஆமேன்.**

---

**அப்படியே அவர் உம்மையும் நெருக்கத்தினின்று விலக்கி ஒடுக்கமில்லாத விசாலத்திலே வைப்பார். உம்முடைய போஜனபந்தி கொழுமையான பதார்த்தங்களால் நிறைந்திருக்கும்.**

**யோபு 36:16**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 09

சனி

## எமது உதடுகளை நகைப்பினால் நிரப்புவார் !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்தலர் 23 - 24

**"இனி அவர் உம்முடைய வாயை நகைப்பினாலும் உம்முடைய உதடுகளை கெம்பீரத்தினாலும் நிரப்புவார்"** (யோபு 8:21)

தேவனுடைய திருவருளால் கிடைப்பபெற்ற அன்பார்ந்த தேவபிள்ளைகளே! கிரிகை செய்யும் இயேசுவின் நாமத்தினால் உங்களை மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன். ஆதிமுதல் எம்மை தெரிந்துக்கொண்டவரும் எம்மை அவருடைய சொந்த ஜனமாக்கிக் கொண்டவருமான தேவனால் நாம் பேறுபெற்றவர்களாயிருக்கிறோம். அவர் எம்மை தெரிந்துகொண்டது இன்னுமொரு மனுஷனின் சிபாரிசின் (உத்தரவாதத்தின்) படியல்ல. அதேப்போல் உங்களைக்குறித்து எத்தனைக் குற்றப்பத்திரிகைகள் அவரிடம் சமர்ப்பித்தாலும் உங்களை புறம்பே தள்ளமாட்டார். ஆகையால் கலக்கமடையாதிருங்கள்.

பிரியமானவர்களே! வாழ்வில் உங்களைச் சூழ்ந்துக் கொள்ளும் சகல கஷ்டங்கள், நோய்கள் துயரங்கள் இவைகளின் நிமித்தமாய் உள்ளம் பாரமாய் அழுத்திக்கொண்டிருக்கிறதா? இத்தனை பிரச்சனைகளையும் எப்படி சமாளிப்பது என கலங்குகிறீர்களா? இதிலிருந்து விடுதலை எப்போது என்று கண்ணீரோடு வாயில் புலம்பலோடும் அங்கலாயித்துக்கொண்டிருக்கிறீர்களா? வேதனையோடு நாட்களை கடத்திக்கொண்டிருக்கிறீர்களா? இப்படிப்பட்ட எத்தனை பிரச்சினைகள் சூழ்ந்த போதும் சோர்வடையாதிருங்கள். உங்களை அழைத்தவர் வல்லமையுள்ளவர். சகல ஜாதிகள் மத்தியில் தமது சுய விருப்பத்தின்படி தெரிந்துகொண்டவர் உங்கள் தகப்பனாயிருக்கிறார். பயப்படாதீர்கள். யோபு 8:21ன்படி தேவன் உங்கள் வாயை நகைப்பினாலும் உங்கள் உள்ளத்தை கெம்பீரத்தினாலும் நிரப்புவார். இவ்வார்த்தைகளை வீணான வார்த்தைகளல்ல அவருடைய வார்த்தைகள் யாவும் கிரியைசெய்கிறதாயிருக்கிறது என வேதம் கூறுகிறது. இன்றும் வார்த்தைகள் செயல்படுகிறது. உங்கள் தேவன் அவரால் செய்யக்கூடியவைகளை எழுதி அதை பரிசுத்த வேதாகமமாக மாற்றி எம் கரங்களில் கொடுத்துள்ளார். அவருடைய அநேக இரகசியமான காரியங்கள் இருப்பினும் எமக்கு வெளிப்படுத்தக்கூடியவைகள் எல்லாம் அதில் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! பரிசுத்த யோவான் 16:20 ல் நீங்கள் துக்கப்படுவீர்கள் ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும். என்று எழுதப்பட்டுள்ளது. இன்று தேவன் உங்களிடம் கூறுவது உங்கள் வேதனைக்குரிய வாழ்வை மாற்றி உங்கள் வாயை நகைப்பினால் நிரப்பி உங்களை ஆசீதிப்பார். நீங்கள் அதிஷ்டசாலி தைரியமாயிருங்கள். உங்கள் தேவன் ஆறுதல் அளிக்கவல்ல சத்தியமானவர். உங்கள் பரலோகப் பிதா உங்கள் வாழ்வில் ஆச்சரியமான காரியங்களை செய்து உங்கள் துக்கங்களை மாற்றி சந்தோஷத்தை தரவ ல்லவர். விசுவாத்தோடு அவரைப் பிடித்துக்கொள்ளுங்கள் சகல காரியங்களையும் வாய்க்கப்பண்ணி விடுவித்து உங்கள் முகத்தை ஆனந்தத்தால் நிரப்புவார். உங்கள் வாழ்வில் புதிய காரிங்களைச் செய்வார். இன்றும் ஒரு நல்ல நாள்!.



நேசத்தந்தையே என் வாயை நகைப்பினாலும் உதடுகளை கெம்பீரத்தாலும் நிரப்ப வல்லவரே நான் உங்கள் சொந்தப் பிள்ளை என் வாழ்வின் எல்லா துன்பத்தையும் மாற்றித் தருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் ஆமேன்.

---

இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான விசாரப்பட வேண்டாம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்.

நெகேமியா 8:10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 10

ஞாயிறு

## கோணலானவைகளைச் செவ்வையாக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்தலர் 25 - 26

**"குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும் கோணலைச் செவ்வையுமாக்குவேன் இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து அவர்களைக் கைவிடாதிருப்பேன்."** (ஏசாயா 42:16)

பாசமுள்ள என் அன்புத் தேவபிள்ளைகளே! ஜீவனுள்ள தேவனுடைய நாமத்தைக் கொண்டு இந்த கிருபை நிறைந்த காலைப்பொழுதிலே "ஜீவ மன்னா" நாளாந்த தியான ஏட்டின் தேவ செய்தியோடு உங்களுடைய இல்லங்களில் வருகிறேன். நீங்கள் உலகத்தில் எங்கு ஜீவிக்கிறவராயிருந்தாலும் எம்மை படைத்து மீட்டுக்கொண்டவருடைய கண்கள் அந்தப் பரத்திலிருந்து இந்த பூமியை நோக்கி அவரது பிள்ளைகளை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அவருடைய ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள் மீது அவரது விழிகள் விஷேசமாய் நோக்கிக்கொண்டிருக்கிறது. அவர் இன்று உங்களுக்கு எப்படி சகாயம் புரிவது எனவும் எந்த வழிகளில் உங்களுக்கு ஒத்தாசை செய்யலாம் என பார்த்துக்கொண்டிருக்கிறார்.

ஆரம்ப வசனம் ஏசாயா 42:16 இன்படி குறைகள் இல்லாதவன் பெலவீனம் இல்லாத மனிதன். குற்றமிழைக்காத மனிதன் ஒரு சம்பூரண மனிதன், எனக் கூறக்கூடிய ஒருவனும் இத்தரணியில் இல்லை எனலாம். எமது தேவனானவர் கோணலானவைகளை சீர்ப்படுத்தும் விசேஷித்த கர்த்தராயிருக்கிறார். அவர் எமது பெலத்தையும், செயல் திறனையும், முன்னேற்றத்தையும் மாத்திரம் நோக்குகிற தேவனல்ல. எமது வாழ்வின் குறைகளை பலவீனத்தால் கோணலாகிக் கிடக்கும் நிலைமைகளைப் பார்த்தறிந்து அவைகளைச் செவ்வையாக்கி எம்மை திரும்பவும் வனைந்து, செதுக்கி புடமிட்டு, எம்மை கீழாக எண்ணியவர்கள் முன்பாய் மேலாக்கி எம்மை வாலாயிராமல் தலையாக மாற்ற வல்லவராயிருக்கிறார். எம்மை விழத்தள்ளி பலவீனப்படுத்தும் நோக்கத்தோடு செயல்படும் சத்துருவானவன். எமது உள்ளம் சோர்ந்து போகும் வேளைகளில் எம் அருகில் வந்து எம் பெலவீனங்களைக் குறித்து எமக்கு நினைவுப்படுத்தி எமது இருதயத்தை அதைரியப்படுத்தி எங்கள் சக்தியை குறைக்க முயல்வான். நீங்கள் அவைகளுக்கு இடங்கொடாதபடி உள்ளம் கலங்காதபடி ஏசாயா 42:16 வாசித்து தியானியுங்கள்.

தேவ பிள்ளைகளே உங்கள் ஆத்துமீகத்திலோ, லௌகீகக் காரியங்களிலே ஏற்படும் கோணல்களை தேவன் அறிந்தவராய் இருக்கிறார். அதைக்குறித்து கவலைப்படாதபடி உங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் என் வாழ்வின் கோணலானவைகளை செவ்வைப்படுத்தி என்னை உங்கள் கரத்தின் களிமண்ணாய் மாற்றிக்கொள்ளுங்கள் என பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் குறைகளினால் மனங்கசந்து ஜீவிப்பதை தேவன் விரும்புவது இல்லை. உங்களைப் படைத்தவர் உங்களை திரும்பவும் சீர்ப்படுத்தி கோணலானவைகளை செவ்வையாக்கி இருந்ததைவிட இன்னும் சௌந்தரியமாக மாற்றுவார். ஜெயம் தரும் தேவன் உங்களோடிருக்கிறார். வெற்றியின் நாள்!.



**இயேசப்பா கோணலானவைகளைச் செவ்வைப்படுத்திய ஜீவாதிபதியே. என் தகப்பனாயிருந்து என் கோணலான காயங்களை அறிகிறவரே என் கோணலை செவ்வைப்படுத்தி உருவாக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமேன்.**

---

..... இஸ்ரவேல் என்னும் கன்னிகையே மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன் நீ கட்டப்படுவாய். மறுபடியும் நீ மேள வாத்தியத்தோடும் ஆடல் பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய். எரேமியா 31:4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 11

திங்கள்

## பொருத்தனையை நிறைவேற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்தலர் 27 - 28

**"நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ அம்மட்டும் நடந்து திரி, உனக்கு அதைத் தருவேன் என்றார்"** (ஆதியாகமம் 13:17)

அன்பார்ந்த தேவனுடைய ஜனமே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் உங்களுக்கு சுப நாளாகட்டும் என பிரார்த்திக்கிறேன். மேலே கூறப்பட்டுள்ள பிரதான வேதாகம வசனத்தின்படி தேவன் ஆபிரகாமுக்கு பெரியதோர் பொருத்தனையை செய்து கொடுத்தார். அப்படியாயின் "அவன் இருந்த இடத்திலிருந்து அவனுக்கு முன்னேயிருந்த தேசத்திலே நீளமாகவும் அகலமாகவும் நடக்கும்படியாகவும், அதை அவனுக்கு கொடுப்பேன்" எனவும் தேவன் சொன்னார். இருப்பினும் அதுவரைக்குமாக அவனுக்கும் அவனது மனைவி சாராளுக்கும் பிள்ளைகள் இருக்கவில்லை. அதையும் நன்றாக அறிந்திருந்த நம்முடைய தேவனாகிய ஆண்டவர் "ஆபிரகாமின் வம்சத்தை பூமியின் மணலைப்போல் பெருகப்பண்ணுவேன்" என பொருத்தனை பண்ணினார். தேவனுடைய பிள்ளைகளே, அவரது இந்த பொருத்தனையின்படியே ஆபிரகாமுக்கூடாக சாராளுக்கு "ஈசாக்கு" பிறந்தான். ஈசாக்குக்கூடாக ரெபேக்காளுக்கு "யாக்கோபு"வும் "ஏசா" வும் பிறந்தார்கள். யாக்கோபிற்கூடாக "12 புத்திரர்கள்" பிறந்தார்கள். 12 பேர்களுள் எண்ண முடியாத பெரிய ஜாதியாகிய "இஸ்ரவேல் வம்சம்" உருவாகியது. உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! அவர் இன்றும் ஜீவிக்கிறார், வல்லமையுள்ளவர்.

தேவனுடைய பிள்ளைகளே! 2013ம் வருடத்திலே நீங்கள் நிறைவேற்ற வேண்டிய அநேக எதிர்பார்ப்புக்கள், ஆசைகள் "நீங்கள் நிறைவேற்றிக்கொள்வது எவ்வாறு?" என நினைத்துக்கொண்டிருக்கலாம். சில வேளைகளிலே உங்களது உள்ளத்திலே அது சம்பந்தப்பட்ட ஏதாவது ஓர் வேதனை இடையிடையே ஏற்படலாம். இருப்பினும் தேவ பிள்ளைகளே, நீங்கள் பெலனடையுங்கள். உங்களையும் என்னையும் அன்பு செய்கின்ற எமது தேவ பிதாவானவர் சங்கீதம் 20:4ன் படி "அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக" என பொருத்தனை பண்ணியிருக்கிறார். அப்படியே எம்முடைய விண்ணப்பங்களை தள்ளிவிடாத, நாம் கேட்கும் யாதாயினும் நமக்கு ஏற்ற நேரத்திலே கொடுக்கக்கூடியவற்றை முடிந்தமட்டும் கொடுத்து உங்களை ஆசீர்வதிக்க தேவன் ஆயத்தமாய் இருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள். அவர் "பொருத்தனைகளை நிறைவேற்றும்" தேவன். ஆதியாகமம் 13:17ல் குறிப்பிடப்பட்டுள்ள விஷேசமான காரியம் யாதெனில் ஆபிரகாமுக்கு அவன் முன்னேயிருக்கும் தேசத்தை பெற்றுகொள்வதற்கு முன்பதாக தேவன் அந்த தேசத்திலே முழுவதுமாக நடக்க கூறியதே. அதிலிருந்து தெரிந்துகொள்வது யாதெனில் தேவனுடைய பொருத்தனை எம்முடைய வாழ்விலே நடைபெறுமானால் "நாம் அவரது பொருத்தனைக்குள் நடக்க வேண்டும்" என்பதே. அவை எம்முடைய வாழ்விலே நடக்கும் என்பதை விசுவாசித்து நாம் அவருக்குள் சந்தோஷமாய் இருக்க வேண்டும். எமது ஆசீர்வாதங்கள் தாமதித்தாலும் அவை நடைபெறும் என்பதை "நிலையான விசுவாசம்" கொண்டு பார்க்க வேண்டும். அப்போது அது நிறைவேறும்.

தேவபிள்ளைகளே, இவ்வருடத்திலே உங்களுடைய வாழ்க்கைக்கு தேவையான சமாதானம், சுகம், பொருளாதார வளர்ச்சி, இன்னும் அநேக காரியங்களை தேவன் உங்களுக்கு அதி சீக்கிரமாகப் பெற்றுக்கொடுப்பார். ஆபிரகாமின் தேவன் உங்களோடு. வெற்றியின் நாள்!



என்னுடைய பிதாவே, நீங்கள் பொருத்தனையை நிறைவேற்றும் தேவன். ஆபிரகாம் உங்களுடைய வசனத்தை விசுவாசித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். பிதாவே, நானும் உம்முடைய வசனத்தை விசுவாசிக்கிறேன். உம்மைக்குறித்து விசுவாசத்தோடு இருக்கிறேன். என்னை ஆசீர்வதித்தருளும். இயேசுவின் நாமத்தினாலே – ஆமேன்.

---

..... மனுஷர் அவருக்குள்ளே ஆசீர்வதிக்கப்படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்

சங்கீதம் 72:17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**ஜீவ மன்னா**
**மார்ச் 12**
**செவ்வாய்**

## உங்களை ஏமாந்து இடங்கொடுக்க வேண்டாம் !

**இன்றைய வேதவாசிப்பு**
ரோமர் 01 - 02

**“ஆகிலும் சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.”** (2 கொரிந்தியர் 11:3)

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே! இன்றும் உங்களுக்கு நன்நாளாகட்டும் என ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தினால் பிரார்த்தனைகளை ஏறெடுக்கிறேன். எல்லா மனிதர்களுக்கும் மத்தியிலும் ஜீவனுள்ள சர்வவல்லமை படைத்தவரான தேவ பிதாவைக்குறித்து தெரிந்துகொண்ட நீங்கள் “மிகவும் அதிஷ்டசாலிகள்” ஏனெனில் மனிதனுடைய அறிவினாலே அவரைக்குறித்து தெரிந்துகொள்ள முடியாததினாலே அவரே சுயவிருப்பதின்படி எம்மைத் தெரிந்துகொண்டு அவரின் ஜீவத்தன்மையை வெளிப்படுத்தியதால் உலகின் எல்லா மனுஷருக்கு மத்தியிலும் நீங்கள் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

தேவனுடைய பிள்ளைகளே, மேலே கூறப்பட்ட 2 கொரிந்தியர் 11:3 பிரதான வேதாகம வசனத்திலே பவுல் அவர்கள் கூறுவது “புராதன வலுசர்ப்பமாகிய பிசாசு அன்று ஏதேன் தோட்டத்திலே ஏவாளை ஏமாற்றியது போல அவனின் தந்திரங்களைப் பயன்படுத்தி எம்மை ஏமாற்றி எம்முடைய உள்ளத்தை அசுத்தப்படுத்துவான்” என அவர் பயத்தோடு இருப்பதாகவே. தேவ பிள்ளைகளே, அன்று கொரிந்தியரின் சபைக்கு பவுல் அவர்கள் அதை அவ்வாறு எழுதி அனுப்பினாரா தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் இன்றைய நாளிலே அந்த தேவ வசனத்திற்கூடாக எம்மோடு பேசுகிறார்.” “ஏவாளைப்போல” எமக்கு “சத்துருவின் உபாயங்களுக்கு ஏமாற வேண்டாம் என கூறுகிறார். “அது ஏவாள் தானே ஏமாந்துபோனது! ஆனாலும் நான் ஏமாறமாட்டேன். சாத்தான் எப்படி என்னை ஏமாற்றுவான்” என நீங்கள் நினைக்கலாம். தேவபிள்ளைகளே, நீங்கள் கவனமாய் இருங்கள். வெளிப்படுத்தல் 12:9 இன் படி “உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே வீழ்த்தப்பட்டது. அதனோடே கூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.” எனவும் எழுதப்பட்டுள்ளது. உங்களது ஆத்துமாவைக் குறித்து மிகவும் கவனமாயிருங்கள்.

தேவனுடைய பிள்ளைகளே, நீங்கள் நித்தமும் தேவனின் முகத்தைத் தேடுங்கள். அப்படியாயின் ஒவ்வொரு நாளும் அதிகாலையிலே உங்களது தேவனுடைய சமூகத்திலமர்ந்து “இடைவிடாது ஜெபம் பண்ணுங்கள்” வேத வசனத்தை வாசித்து உங்களது உள்ளத்திலே அவற்றை எழுதிக்கொள்ளுங்கள். நித்தமும் அவற்றைத் தியானம் பண்ணுங்கள். அவ்வாறே வாழ முயற்சி செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் சாத்தானின் இலக்குகளுக்கும் உபாயங்களுக்கும் அகப்பட மாட்டீர்கள். ஏனெனில் தேவ ஆவியானவர் எம்முடைய உள்ளத்தை ஏவி அந்த ஏமாற்று ஆலோசனைகளையும் தந்திரங்களையும் எம்மைக்கொண்டு நிராகரிப்பார்” அப்பொழுது நீங்கள் “அறிவாளிகள்” என நினையாது இடைவிடாது ஜெபம் பண்ணி தேவ ஆவியினாலே நிறைந்து பெலப்படுங்கள். உங்களது வாழ்வை அழிக்கும்படியாக செயற்படும் சாத்தானுக்கு விரோதமாக எழும்புங்கள். வெற்றியின் நாள்!



**என்னுடைய பிதாவே, இன்றைய வேத வசனத்துக்காக உமக்கு நன்றி. சாத்தானுடைய ஏமாற்று காரியங்களிலிருந்து நான் மீட்கப்பட் நீர் எனக்கு முன்னறிவித்தமையினாலே உமக்கு நன்றி. என்னுடைய பிதாவே, உம்மோடு இடைவிடாது ஜெபித்து என்னுடைய ஆத்துமாவை பெலப்படுத்திக்கொள்ள எனக்கு உதவி செய்தருளும். இயேசுவின் நாமத்தினால் ஆமேன்.**

---

**..... ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம்பண்ணுவோம்**

**யோவான் 14:23**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 13

புதன்

## நீங்களும் தேவனை நோக்கி பாருங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

ரோமர் 03 - 04

**“எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.”**(சங்கீதம் 121:1,2)

அன்புத் தேவபிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு நன் நாளாகட்டும் என பிரார்த்திக்கிறேன். “ஜீவ மன்னா அனுதின தியானத்தை கையிலே வைத்திருக்கும் நீங்கள் அனைவரும் ஜீவனுள்ள உண்மையான தெய்வம் யார் என்பதை அறிந்துகொண்டு, அவரை முழு மனதுடனே விசுவாசித்து, அவருடைய உரிமையான பிள்ளைகளாக இருக்கிறபடியினாலே நீங்களனைவரும் மிகவும் அதிஷ்டசாலிகளே! ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!

தேவனுடைய பிள்ளைகளே, மேலே கூறப்பட்ட சங்கீதம் 121:1,2 இன் படி தெரிந்துகொள்வது யாதெனில் “எமக்கு ஒத்தாசை வருவது வானத்தையும் பூமியையும் படைத்த தேவனிடமிருந்தே” என்பதாக. இருப்பினும் அந்த வேத வசனத்திலே இன்னுமொரு விசேஷம் உண்டு. அப்படியாயின் அந்த வசனத்தின் ஆரம்பத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது “பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்” என்பதாக. அதற்கூடாக சங்கீதக்காரன் ஒத்தாசை பெற்றுகொள்ள, உதவி பெற்றுகொள்ள மனுஷனை நோக்கி பாராமல் அவனைப் படைத்த தெய்வமான “பரலோக பிதாவை நோக்கி பர்ப்பதாக” அவன் எமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. நீங்கள் ஒரு நிமிடம் உங்களைக் குறித்து நினைத்து பாருங்கள். நீங்கள் தேவனாகிய ஆண்டவரை குறித்து நினைத்து எவ்வளவு காலமாகிறது? அந்த காலத்திற்குள்ளே நீங்கள் எவ்வளவாய் அவரிடம் ஒத்தாசை பெற்றுள்ளீர்கள்? என்று கொஞ்ச நேரம் தியானித்து பாருங்கள். இங்கே நீங்கள் மனிதர்களுடைய ஒத்தாசையை பெறும்படியாக மனிதர்களை மாத்திரம் எதிர்பார்க்கிறீர்களா? இல்லையா? என்பதை நீங்கள் அறிந்துக்கொள்ள முடியும். அப்படியே நீங்கள் கிரிகையை செய்திருப்பீர்களானால் நீங்கள் பெற்றுகொண்ட ஆசீர்வாதத்தின் அளவு மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளது” என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

தேவ பிள்ளைகளே, நீங்கள் உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். உங்களுடைய தேவன் உங்களுடைய கண்களுக்கு காணமுடியாதவாறு அரூபியாய் இருக்கிறாரா? அவர் ஜீவனுள்ள தேவன். இன்றும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தினாலே நாம் ஜெபித்து ஏதாவதொன்றை கேட்கும்போது அவர் அதை நிறைவேற்றி தருவார். அவருக்கு “செய்ய முடியாதது ஒன்றுமில்லை” இருப்பினும் லௌகீகமாக இருக்கும் மனுஷருக்கு செய்யக்கூடியது எல்லைக்குட்பட்டது. ஆகையால் நாம் காணும் இவ்வுலக மனுஷனை விட அரூபியாய் இருக்கும் ஜீவனுள்ள வல்லமையாக கிரியை செய்யும் உங்களது பரலோக படைப்பின் தேவ பிதாவானவருக்கு நேராக “உங்களுடைய கண்களையும் கைகளையும் உயர்த்துங்கள்” அவர் உங்கள் பிதாவாயிருக்கிறபடியினாலே நீங்கள் அவருக்குள் சந்தோஷமாய், சமாதானமாய், சுகமாய், செழிப்பாய் வாழ்வது அவரது விருப்பம். பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் சந்தோஷமாக வாழ்வதைக் காண விரும்புவதைப் போலவே எம்முடைய பரலோக பிதாவும் அப்படியே. உங்களது பிதாவை நோக்கிப்பார்த்து நீங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு வெற்றியின் நாள்!



என்னுடைய பிதாவே, படைப்பின் தேவபிதாவான உமக்கு எல்லாவற்றையும் செய்ய முடியும். நான் உம்மை நோக்காது மனுஷரை நோக்கிப்பர்த்து அவர்களது ஒத்தாசையை நாடினேன். இன்று முதல் நான் உம்மை நோக்கி மாத்திரம் பார்ப்பேன். நீர் எனக்கு ஒத்தாசை செய்தருளும். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் – ஆமேன்.

வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்

சங்கீதம் 115:15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 14

வியாழன்

# தேவனுடைய சிட்சிப்பு நம்மை பாக்கியவானாய் மாற்றும் !

இன்றைய வேதவாசிப்பு

ரோமர் 05 - 06

**"சிட்சித்து, உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்."** (சங்கீதம் 94:13)

அன்புத் தேவபிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் உங்களுக்கு நன்நாளாகட்டும் என நான் பிரார்த்திக்கிறேன். பிள்ளைகளே, இன்றைய நாள் உங்களுக்கு வித்தியாசமான ஒரு தேவ செய்தி கிடைக்கப்பெற்றுள்ளது "தேவனால் ஆசீரவதிக்கப்பட்டவர்கள் மிகவும் அதிஷ்டசாலிகள் என்பதாக" நான் எண்ணுகிறேன். இருப்பினும் இன்றைய நாளில் தேவ செய்தியினாலே உங்களுக்குக் கூறுவது "தேவனாலே சிட்சிக்கப்படுகிறவர்கள் மிகவும் அதிஷ்டசாலிகள்" என்பதாக.

தேவனுடைய பிள்ளைகளே, 29 வருடங்களாக அவரோடுகூட செல்லும் என்னுடைய ஆத்மீக பயணத்திலே அநேக தடவைகள் அவருடைய தடியினாலே என்னை சிட்சித்திருக்கிறார். இருப்பினும் நான் இப்பொழுது அச்சிட்சிப்பின் நிமித்தமாய் அதிஷ்டசாலியாய் மாறியிருப்பதைக் காண்கிறேன். ஏனெனில் அவர் என்னை அதிகமாய் நேசிக்கிறபடியினாலே நான் மிகவும் சிறயதோர் பிழையைச் செய்தேனா, அவருடைய தடியைப் பயன்படுத்தி அந்நேரத்திலே என்னை சிட்சித்து என்னை சரி செய்வார். வேதாகமத்திலே வெளிப்படுத்தல் 3:19 இலே எழுதப்பட்டிருப்பது "அவர் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களை கடிந்து கொண்டு சிட்சிப்பதாகவே ஆகையால் அவர் உங்களை அன்பு செய்கிறபடியினாலே உங்களாலே ஒரு பிழை செய்யப்படும் போது அவர் அதற்கு உங்களை தண்டித்து உங்களை சரியான நல்ல தேவபிள்ளையாக்க நித்தமும் முயற்சிக்கிறார். என்னைப்போலவே அது உங்களுக்கும் பொருத்தமானது. பெற்றோர்கள் தன்னுடைய பிள்ளை பிழை செய்தவுடன் தண்டித்து அவர்களை சரியான வழியிலே நடத்துவது போல் எம்முடைய பரலோக தேவபிதாவும் எம்முடைய ஆத்துமாவைக் காப்பாற்றுவதற்காக எம்மை "சரியான அளவிலே தண்டனையைப் பெற்றுகொடுக்க அவருடைய தடியை பயன்படுத்துகிறார்."

தேவனுடைய பிள்ளைகளே, உங்களுடைய பரலோக தேவன் எம்மை சந்தித்ததால் எம்மை அவருடைய சொந்த பிள்ளைகளாக பிரித்தெடுத்த படியினாலே எம்முடைய உலகரீதியான வாழ்விலே எம்மை செழிப்பாக மாற்றுவதற்கு அல்ல. உங்களுக்கு இருக்கிற இந்நியைிலேயே ஏழையாய், தரித்திரனாய், சில சில குறைகள் காணப்படலாம். அதாவது பூமிக்குரிய இவ்வாழ்விலே சிற்சில குறைகள் காணப்படலாம். அதனால் "இயேசு கிறிஸ்து என்னை இவ்வளவாய் அன்பு செய்கிறார் என்றால் அவருக்கு என்னுடைய வாழ்க்கையை இதைவிட ஓர் செழிப்பை உண்டாக்க முடியும்" என உங்களுககு நினைவிற்கு வரலாம். இருப்பினும் உங்களுடைய லௌகீக குறைகளை குறித்து நினைத்து உங்களது உள்ளத்தை அதைரியப்படுத்திக்கொள்ள வேண்டாம். "நீ என்னுடைய சம்பத்து" என உங்களுடைய ஆத்துமாவைக்குறித்து அவர் பாராட்டியிருக்கிறார். "உன்னுடைய ஆத்தமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்" என்பதே அவருடைய விருப்பமாதலால் உங்களை நித்தமும் உயர்த்த அவ எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். இன்றைய நாளிலே நீங்கள் பெறும் சிட்சிப்பின் நிமித்தமாய் எதிர்காலத்திலே உங்களை அதிஷ்டசாலியாய் மாற்ற அவர் வல்லமையுள்ளவர். உங்களுக்கு வெற்றியின் நாள்!.



என்னுடைய பிதாவே, நீர் என்னை அதிஷடசாலியாக்குகின்ற படியினாலே நன்றி. ஏனெனில் உம்மாலே நான் பெற்ற கண்டிப்பும், சிட்சிப்பும் என்னுடைய அழிவுக்காக அல்ல ஆசீர்வாதத்திற்கே. அதனாலே நான் நல்லதோர் ஆத்துமீக தேவபிள்ளையாய் மாறுவேன். உம்முடைய தடியினாலே என்னை நடத்தியருளும். இயேசுவின நாமத்தினாலே – ஆமேன்.

---

கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும் தம்முடைய சுதந்தரத்தை கைவிடாமலும் இருப்பார்

சங்கீதம் 94:14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 15

வெள்ளி

## உங்களை அன்பு செய்யும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ரோமர் 07 - 08

**"நீ என் பார்வைக்கு அருமையான படியினால் கனம் பெற்றாய், நானும் உன்னை சிநேகித்தேன்."** (ஏசாயா 43:4)

அன்பார்ந்த தேவ ஜனமே, இன்றும் உங்களுக்கு நல்ல நாளாகட்டும் என வாழ்த்தி இவ்வாறு உங்களை சந்திக்க வருகிறேன். தேவ பிள்ளைகளே, மேலே கூறப்பட்ட ஏசாயா 43:3ம் வசனத்திலே அநேக சந்தர்ப்பத்தில் உங்களுக்கு தேவ செய்தியைக் கொண்டுவந்த போதிலும் ஆண்டவராகிய தேவனின் "ஈடற்ற அன்பை" சொல்லி முடியாத அளவுக்கு மிகவும் அதி விஷேடமான அன்பு எனக் கூற முடியும். 29 வருடங்களாக நான் கடந்து வந்த ஆத்மீக பயணத்திலே நான் பெற்ற அந்த அன்பு, இரக்கம், அனுசரணை குறித்து உங்களுக்கு சொல்ல அநேக ஆவிக்குரிய அனுபவங்களை நான் பெற்றிருக்கிறேன். அநேக நாட்களுக்கு, அநேக வருடங்களுக்கு சொல்லக்கூடிய அதிகமான அனுபவங்களை நான் பெற்றிருக்கிறேன் என்பதை அதிக விசுவாசத்தோடு கூற விரும்புகிறேன். ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! யாவரும் உங்களைக் கைவிட்டு விட்டார்களா? உங்களது தேவனாகிய கர்த்தரின் "அன்பு" உங்களிடமிருந்து எப்பொழுதும் ஒழிந்து போகாது.

தேவனுடைய பிள்ளைகளே, தேவன் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினாலே அவரது அன்பை எமக்கு தெரியப்படுத்தினார். அப்படியே அவரது பரிசுத்த தேவ ஆவியானவர் அவரது அன்பை எமது உள்ளங்களுக்கு ஊற்றியிருக்கிறார். ஆகையால் ஆத்மீக பிள்ளைகளாகிய எம் அனைவருக்கூடாகவும் அவரது அன்பை எம்முடைய உள்ளங்களிலே உயிரூட்டும்படியாய் தேவனுக்கு நாம் நித்தமும் இடைவிடாது ஜெபங்கள் ஏறெடுக்க வேண்டியிருக்கிறது. இருப்பினும் மிகவும் கவலைக்குரிய விடயம் யாதெனில் மனிதனை ஈடு இணையற்ற அன்பினாலே நேசிக்கும் தேவனைக்குறித்து தேடாது அவருடைய உன்னத அன்பைக்குறித்து உள்ளத்தை கொண்டு செல்லாது மனிதன் இன்னுமொரு மனிதன் அன்பை நாடி அவன் பின்னே செல்வது தான். ஆகையால் தேவபிள்ளகைளே, அநேக சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும், வேதனைகளுக்கும் முகங்கொடுக்க நேரிடுகிறது. உங்களுடைய தேவனாகிய கர்த்தர் "உங்களை அன்பு செய்கிறார் என பரிசுத்த வேதாகமத்திலே அநேக இடங்களிலே எழுதப்பட்டுள்ளது. அந்த ஒரு வசனமும் பொய்யானதாகவும் உங்களை ஏமாற்ற வேண்டும் எனவும் எழுதப்படவில்லை.

தேவ ஜனமே, உங்கள் தேவனாகிய கர்த்தர் உண்மையாகவே நேசிக்கிறார். ஆகையால் உங்கள் வாழ்வில் இருக்கும் எல்லா பிரச்சினைகளும், வேதனைகளும், சவால்களும் குறித்து உங்களுடைய தேவனாகிய கர்த்தருக்கு சொல்லுங்கள். உங்களது உள்ளத்திற்கு ஓர் துக்கம், வேதனை ஏற்படாதவாறு அவையெல்லாவற்றையும் உங்களுக்கு நிறைவேற்றி தர உங்கள் தேவனாகிய கர்த்தர் மிகவும் வல்லவர். அவ்வாறே உங்களது வாழ்விலே முகங்கொடுக்கும் உங்களது பிரச்சனை, வேதனைகள் சவால்கள் எதுவாயிருப்பினும் அவற்றை பிரசித்தப்படுத்தி வெட்கங்கள், அவமானங்கள், நிந்தனைகள் உங்களை நேராதபடி உங்களது "நல்ல நண்பனாக" பாதுகாத்து உங்களுக்கு அவர் துணையாக இருப்பார். "அவர் உண்மையாகவே உங்களை நேசிக்கிறார்" வெற்றியின் நாள்!.



**என்னுடைய பிதாவே, நீர் எனது அன்பான தகப்பன். உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினாலே உமது அன்பை எனக்கு காட்டினீர். இருப்பினும் நான் உமது அன்பை குறித்து நோக்காது மனிதரின் அன்பிற்கு பின்னால் நான் சென்றேன். நீர் என்னை மன்னித்து உம்முடைய ஆதி அன்புக்கு கிட்டிச்சேர்த்தருளும். இயேசுவின் நாமத்தினால் – ஆமேன்.**

---

**...... ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்கிறேன்.**

**எரேமியா 31:3**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

மார்ச் 16

சனி

## எம்மை மேன்மை படுத்தும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ரோமர் 09 - 10

**"இதோ நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய், உன்னை அறியாதிருந்த ஜாதி உன் தேவனாகிய கர்த்தர் நிமித்தமும் இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தமும் உன்னிடத்திற்கு ஓடிவரும், அவர் உன்னை மேன்மைபடுத்தியிருக்கிறார்."**
(ஏசாயா 55:5)

அன்புள்ள தேவ பிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு நன் நாளாகட்டும் என பிரார்த்திக்கிறேன். இலங்கையிலிருக்கும் இரண்டு கோடியே மூன்று இலட்சம் இலங்கையருக்கு மத்தியில் ஜீவனுள்ள தேவன் யாரென்று இஸ்ரவேலின் வல்லமையுள்ள தேவனாகிய படைப்பின் தேவனாகிய அவரை ஏற்றுக்கொண்டு அவருக்குள் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நீங்கள் அனைவரும் உண்மையிலேயே மிகவும் அதிஷ்டசாலிகள். அப்படியே அவர் உங்களை நோக்கி பார்க்கும் தேவனானபடியாலும் உங்களின் நன்மையான காரியங்களைக் குறித்து நித்தமும் நினைக்கும் தேவனானபடியினாலும் நீங்கள் உண்மையாகவே ஆசிர்வதிக்கப்பட்டவர்கள். இருப்பினும் அவரது நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியாதபடி எம்முடைய "பாவங்கள்" எம்முடைய வாழ்க்கைக்கு குறுக்காக செல்வதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? இருப்பினும் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! மேலே கூறப்பட்ட ஏசாயா 55:5ன்படி பிரதான வேதாகம வசனத்திலே குறிப்பிட்டுள்ளபடி "உங்களது தேவனாகிய கர்த்தர் உங்களை மேன்மைபடுத்திருக்கிறார்"

தேவனுடைய ஜனமே, ஆகையால் யாருக்கும் உங்களை திட்டம் தீட்டி அகௌரவப்படுத்த முடியாது என்பதை இயேசுவின் நாமத்தினால் விசுவாசியுங்கள். சர்வவல்லமையுள்ள தேவ பிதா இப்படியாக எம்மை மேன்மைப்படுத்துவது ஏன் என்பதை நீங்கள் அறிவீர்களா? ஏனெனில் எந்தவொரு தனது பிள்ளை சமுதாயத்திலே பெரிய நிலைமையிலேயும், உயர்ந்த பதவிலேயும் இருப்பது மிகவும் விருப்பம். தனது பிள்ளைகள் சமூகத்திலே வேறுபட்டவனாக மிகவும் முக்கியமானதொரு நபராக இருப்பதை காண்பதே அவரது ஒரே விருப்பம். அதைவிட உங்களது தேவ பிதாவானவர் நீங்கள் உயர்வதைக் காண்பதற்காக மிகவும் பிரசன்னமாய் இருக்கிறார். ஆயினும் இதுவரைக்குமாக நீங்கள் ஏதாவதொரு விதத்திலே தாழ்த்தப்பட்டிருக்கிறீர்களா? மனிதர்கள் உங்களை சிறுமைப்படுத்தி சமுதாயத்தை விட்டு ஒதுக்குகின்றார்களா? உங்களை எதுவுமே செய்ய முடியாத சோம்பேறியான மனிதர்கள் என உங்களுக்கு சமுதாயத்திலே நாமத்தை தரிப்பித்திருக்கின்றார்களா? அயினும் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! உங்களது தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருந்து உங்களை மேன்மைப்படுத்துவார். நீங்கள் அவரை விசுவாசித்து உங்களது வாழ்வை முழுமையாக அவருக்கு ஒப்புக்கொடுங்கள்.

தேவபிள்ளைகளே, தேவன் எம்மை மேன்மைபடுத்தியிருந்தாலும் சிலவேளைகளிலே எமது பாவங்களால் அல்லது சத்துருவின் சில விரோதமான செயல்களினால் அவைகளுக்கு தடைகள் ஏற்படலாம். நீங்கள் இடைவிடாது ஜெபம் பண்ணி உங்களது வாழ்வை சரிபடுத்திக்கொள்ளுங்கள். உங்களது தேவனாகிய கர்த்தர் உங்கள் பட்சத்திலிருந்து உங்களுக்கு வெற்றியைத்தர ஒத்தாசை செய்வார். தேவன் உங்களோடு. உங்களுக்கு வெற்றியின் நாள்!



என்னுடைய பிதாவே, நீர் எமது மேன்மையை பாதுகாக்கும் தேவன். என்னை உம்முடைய சொந்த பிள்ளையாக்கினபடியால் நீர் எனது மேன்மையைக்குறித்து அதிகமாய் கவனிக்கிறீர். என்னை மேன்மைப்படுத்தி நீர் எனக்கூடாக மகிமைப்படும். இயேசுவின் நாமத்தினால் ஆமேன்.

---

உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது,
பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும்
புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். செப்பனியா 3:20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
மார்ச் 17
ஞாயிறு

# உங்கள் ஆத்துமாவை வனையும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ரோமர் 11 - 12

**"குயவன் வனைந்துக்கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று, அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு தம் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்."** (எரேமியா 18:4)

அன்பார்ந்த தேவபிள்ளைகளே, எம்முடைய தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் உங்களுக்கு வெற்றியின் அழகானதோர் நாளாகட்டும் என நான் பிரார்த்திக்கிறேன். "இப்பூமியிலே எல்லா ஜாதிகளையும் விட எம்மை உயர்த்துவதாக" எம்முடைய தேவனாகிய கர்த்தர் உபாகமம் 28:2 இலே எமக்கு பொருத்தனை செய்தபடியால் அப்படியே இன்னும் உங்களது வாழ்விலே எந்தவொரு உயர்வும் நடைபெறாத நிலையிலேயும் இன்னும் வாழ்விலே பிரச்சினைகளுக்கு முடிவில்லாத நிலைமையிலேயும் எல்லா ஜாதிகளைவிட உன்னை உயர்த்துவேன் எனக்கூறிய அந்த வேதவசனம் மூலமாக உங்களது வாழ்விலே இவை யாவும் நிறைவேறும் என நீங்கள் நினைக்கலாம். உங்களது உள்ளம் கலங்காதிருப்பதாக!

தேவபிள்ளைகளே, இலங்கையிலே இருக்கும் இரண்டு கோடியே மூன்று இலட்சம் இலங்கையருக்கு மத்தியில் அவருடைய தேவ ஆவியைப்பெற்றுகொண்ட நீங்கள் "மிகவும் அதிஷ்டசாலிகள்" ஏனெனில் அது நீங்கள் பெற்ற உயர்ந்த வரப்பிரசாதமாகும். ஆகையால் நீங்கள் எல்லா மனிதர்களுக்கு மத்தியிலும் உயர்ந்திருக்கிறீர்கள். தேவபிள்ளகைளே, உங்களது தேவனாகிய கர்த்தர் உங்களோடு இருப்பதனால் உங்களது வாழ்வு அதிஷ்டமானது. அப்படியே எம்முடைய தேவன் எம்மைத் தெரிந்துகொண்டது லௌகீக செழிப்பை எமக்குக் கொடுத்து எம்மை ஐசுவரியவானாக்க அல்ல. உங்களுக்குள்ளே இருக்கும் அவர் உங்களுக்குக' கொடுத்த ஆத்துமா அவருக்கு அருமையானபடியால் "உங்களது ஆத்துமாவின்" நிமித்தம் உங்களை அவர் தெரிந்துகொண்டார். இருப்பினும் மாமிசமான சரீரத்திற்குள் உங்களது ஆத்துமா இருப்பதினால் இயற்கையாக அது இப்பூமிக்குரியதாக காணப்படுகிறது. ஆகையால் உங்கள் வாழ்விலே கடைசி காலத்திற்கு நீங்கள் போகும் முன்பதாக நீங்கள் தேவனோடு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பதாக உங்களது அத்துமாவை அதற்காக அயத்தப்படுத்த வேண்டும். பரலோகத்திற்கு தகுதியானவராக யோவான் 14:3ன்படி "இயேசுகிறிஸ்துவோடு அவர் இருக்கிற ஸ்தலத்திலே இருக்கும்படியாக எம்முடைய ஆத்துமாவை சரிப்படுத்திக்கொள்ள அவசியமாயிருக்கிறது.

தேவனுடைய பிள்ளைகளே, தேவன் எமது ஆத்துமாவை அவரது விருப்பத்தின்படி வனையும் போது எமக்கு வெவ்வேறு உபத்திரவங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். ஆயினும் அதைரியமடையாதீர்கள். தேவனுக்கு தேவைப்படுவது எமது ஆத்துமா அதாவது எமது உள்ளாந்த மனுஷனை அழகாக வனைவதற்கே. ஆகவே, உங்களது உபத்திரவங்களிலே பெலப்படுங்கள். நீங்கள் ஆத்மீக மனிதனானபடியால் எல்லாவற்றையும் குறித்து ஆவிக்குரிய பக்கமாக நினைத்துப்பாருங்கள். அப்படியே நீங்கள் அவருக்கு சொந்தமானபடியால் எல்லா "ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும் லௌகீக ஆசீரவாதங்களாலும்" அவர் உங்களை ஆசீர்வதிப்பார். இருப்பினும் அது உங்களது சுய விருப்பத்தின்படி அல்ல. அவரது விருப்பத்தின்படியே. அவரது உயர்ந்த சித்தம் உங்களது வாழ்விலே நிறைவேறும்படி உங்களது வாழ்வை அவருக்கு ஒப்பக்கொடுங்கள். உங்களுக்கு வெற்றியின் நாள்!.



**என்னுடைய பிதாவே, நீர் எனது ஆத்துமாவை வனையும் தேவன். நான் மாமிசமான சரீரத்திற்குள் இருப்பதனாலே என்னுடைய ஆத்துமா பூமிக்குரியதாக இருக்கிறது. இருப்பினும் பிதாவே நீர் பரலோகத்திலிருக்கின்றீர். உம்மிடம் நான் வர நீர் என் ஆத்துமாவை வனைந்தருளும். இயேசுவின் நாமத்தினாலே ஆமேன்.**

---

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட
உட்கார்ந்ததுபோல ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய
சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படி அருள்செய்வேன் வெளி. 3:21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

மார்ச் 18

திங்கள்

## சிறுமைப்படுத்தப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ரோமர் 13 - 14

**"கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார். நான் மெலிந்து போனேன், அவர் என்னை இரட்சித்தார்."** (சங்கீதம் 116:6)

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் நன் நாளாகட்டும் என்று வாழ்த்தி ஜீவ மன்னா அனுதின தியானத்திற்கூடாக இன்றும் நான் உங்களது இல்லத்திற்கு இப்படியாக அனுதின ஜீவமன்னாவிற்கூடாக "நீங்கள் மிகவும் அதிஷ்டசாலிகள்" என வாசிக்கும்போது அந்த வசனத்தின்படியே உங்களது துரதிஷ்டமான வாழ்க்கையை அதிஷ்டமானதாக மாறும் என நான் விசுவாசிக்கிறேன். ஏனெனில் அவரது வசனத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது "மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும், அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள் என்பதாக.

தேவனுடைய பிள்ளைகளே, மேலே கூறப்பட்ட பிரதான வேதாகம வசனத்திலே எழுதப்பட்டிருப்பது "தாழ்த்தப்படுவார்களை அவர் இரட்சிப்பார்" என்பதாக. தேவப்பிள்ளைகளே, எம்மை மனிதர்கள் பாராட்டும்பொழுது அது நல்லது. அயினும் மனிதனுடைய அடி உள்ளத்திலே வைராக்கியம், கசப்புக்கள், பொறாமைகள், வைத்துக்கொண்டு மற்ற மனிதர்களின் முகத்துக்காக மாத்திரம் அன்புகாட்டி பாராட்டுவது விருதாவான ஒரு கிரியை ஆகையால் நீங்கள் மனிதரை நோக்கிப் பாராது உங்களது தேவனாகிய கர்த்தரை நோக்கிப் பாருங்கள். உங்களை தள்ளமாட்டார். அவர் எப்பொழுதும் உங்களை தீமைச் செய்ய இடமளிக்கமாட்டார். அவர் எமது சுய மேன்மையை பாதுகாக்கும் தேவனாகையால் அவர் எப்பொழுதும் உங்களை இழிவுபடுத்த இடமளிக்கமாட்டார். பரிசுத்த வேதாகமத்திலே உபாகமம் 28:1 குறிப்பிட்டுள்ளவாறு "அவர் இப்பூமியிலே எல்லா ஜாதிகளையும்விட உங்களை உயர்த்தி வைக்க" உங்களை தெரிந்தெடுத்த தேவன் உங்களது உள்ளம் கலங்காதிருப்பதாக!

தேவபிள்ளைகளே, ஆகையால் உங்களது ஆற்றல்களைக் குறித்தும், திறமைகளைக்குறித்தும்,உங்களது நிலை, தகுதி, கல்வியறிவைக் குறித்தோ பார்க்காது உங்களது சர்வவல்லமையுள்ள தேவனின் முன்னிலையில் "தேவனே நான் வெறுமையான ஓர் பாத்திரம் உம்முடைய ஆவியினாலே என்னை நிரப்பும் என்று அவருக்கு உங்களது முழு உள்ளத்தோடு ஜெபம் பண்ணுங்கள். அப்படியே உங்களது ஒவ்வொரு நடத்தையிலும் மிகவும் தாழ்மையோடிருங்கள். மற்றவர்கள் உங்களைத் தாண்டி உங்களைவிட மிக வேகமாக மேல்நோக்கிச் செல்ல உயர்ந்து செல்ல முயற்சி செய்யும்போது அதற்காக நீங்கள் கலங்காது அவர்களை முன்னோக்கிச்செல்லவிட்டு அமைதியாயிருங்கள். மனிதர்கள் உங்களை வேண்டுமென்றே தாழ்த்தினாலும், உஙகளை இகழ்ந்து ஏளனம் செய்தாலும் அவர் உங்களை ஒதுக்கிவைத்தாலும் உங்களது உள்ளத்தை கலங்கமைடைய இடங்கொடுக்க வேண்டாம். ஏனெனில் உங்களது அன்பான தேவபிதாவானவர் உங்களோடிருப்பதால் உங்களுக்கு வெற்றியுண்டு. உங்களுக்கு வெற்றியின் நாள்!.



என்னுடைய பிதாவே, நீர் உயர்ந்த தேவன். ஆயினும், உங்களது படைப்பின் பிள்ளைகளாகிய எமக்கூடாக நீர் மேன்மைப்படும் தேவன். என்னுடைய பிதாவே, என்னுடைய வாழ்விலெல்லாம் எல்லா குறைகள், பெலவீனங்கள் நீங்கி எனது வாழ்வை நீர் உயர்த்தியருளும். இயேசுவின் நாமத்தினால் – ஆமேன்.

....... உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி நடக்கவும் அவைகளைச் செவிகொடுத்து வந்தால் கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேலாவாய் உபாகமம் 28:14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

மார்ச் 19

செவ்வாய்

## எல்லாவற்றையும் சந்திக்கும் உங்கள் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ரோமர் 15 - 16

**"ஆபிரகாம் அந்த இடத்திற்கு யெகோவா யீரே என்று பேரிட்டான். அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துகொள்ளப்படும் என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டுவருகிறது."** (ஆதியாகமம் 22:14)

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் உங்களுக்கு அழகானதொரு நாளாகட்டும் என பிரார்த்திக்கிறேன். இன்றைய நாளை தொடங்க முன்பதாக நீங்கள் "இன்று செவ்வாய்க்கிழமை கெட்ட நாள்" "இன்று சனிக்கிழமை கெட்ட நாள்" என்று நினையாதிருங்கள். ஏனெனில் உங்களுடைய தேவனாகிய கர்த்தர் படைத்த எல்லா நாட்களும் நல்லதும் நன்மையானதுமாகும். உங்களுக்கு உலகப்பிரகாரமாக தீமைகள் உண்டானதா? உங்களைத் தெரிந்துகொண்ட தேவன் உங்களோடு இருப்பதனால் அவரது தெரிந்துகொள்ளுதலினால் அவரோடு நீங்கள் செல்லும் பயணமும் எந்தவொரு தீங்குமின்றி இருக்கிறது என்பதை முழு மனதுடனே விசுவாசியுங்கள். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!

தேவனுடைய பிள்ளைகளே, மேலே கூறப்பட்ட பிரதான வேதாகம வசனமாகிய ஆதியாகமம் 22:14 வேத வசனத்தின்படி "எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும் தேவன் எம்மோடு. அந்த அந்த அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது தேவன் ஆபிரகாமோடு பேசி "அவரது ஒரே குமாரனாகிய ஈசாக்கை தேவனுக்கு பலியாக ஒப்புகொடுக்கும்படி" கூறினார். ஆபிரகாம் அதைப்பற்றி இரண்டு தடவை யோசிக்காகு தன்னுடைய ஒரே குமாரனைக் கூட்டிக் கொண்டு "தகனபலியாக" தேவனுக்கு அவனை ஒப்பக்கொடுக்க மொரியா தேசத்திற்கு போனான். ஆபிரகாம் அதைக்குறித்து வேறு வழியாய் யோசிக்காது தேவனாகிய கர்த்தர் கூறியதை நினைத்து முன்னோக்கிச் சென்றார். அவன் அந்த குறிப்பிட்ட இடத்திற்கு சென்று "அங்கே பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கை கட்டி, அந்த பலிபீடத்திலடுக்கிய கட்டடைகள் மீது அவனை வைத்து வெட்டும்படியாக தன்னுடைய கையை நீட்டி கத்தியை எடுத்தான்." தேவ பிள்ளைகளே, அப்பொழுது கர்த்தருடைய தூதன் பரலோகத்திலிருந்து அவனைத் தடுத்தான். இது கடைசி நிமிஷத்திலே நடந்தது. இப்படியாக உங்கள் வாழ்விலே நீங்கள் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றும்படியாக செல்லும்போது உங்களுக்கு அநேக உபத்திரவங்கள் ஏற்படலாம். இருப்பினும் ஆபிரகாமுக்கு தேவன் தகனபலியாக ஒப்புக்கொடுக்க ஆட்டுக்கடாவை தேவன் கொடுத்தது போல கடைசி நிமிடத்திலே உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களது வாழ்விலும் அற்புதத்தைச் செய்து உங்களை ஆச்சரியப்படுத்த அவர் கிரிகை செய்வார்.

தேவனுடைய ஜனமே, நீங்கள் தைரியத்தோடிருங்கள். பெலப்படுங்கள். ஆபிரகாமின் தேவன் உங்களோடு. அன்று தேவன் ஆபிரகாமுக்கு தகன பலியாக ஒப்புக்கொடுக்க ஆட்டுக்கடாவை கொடுத்தது போல இன்றைய நாளில் உங்களது எல்லா தேவைகளையும் அவர் சந்திப்பார். ஆபிரகாமைப்போல நீங்களும் அவரது குரலுக்கு நன்றாக செவிகொடுத்து அவர் உங்களுக்குக் கூறுவதை அந்தப்படியே நிறைவேற்றுங்கள். இருப்பினும் நீங்கள் அவருக்கு பிரியமானதை செய்யும்போது இவ்வுலகிலே வெவ்வேறு உபத்திரவங்கள் ஏற்படலாம். ஆபிரகாமைப்போல கலங்காது முன்னோக்கிச் செல்லுங்கள். உங்களுககு வெற்றியின் நாள்!.



என்னுடைய பிதாவே, நீர் எல்லாவற்றையும் சந்திக்கும் தேவன். நான் உம்மை விசுவாசிக்கிறேன். நான் உம்முடைய குரலுக்கு செவிகொடுத்து உமது விருப்பத்தின்படி வாழுவேன். பிதாவே என்னுடைய எல்லா தேவைகளையும் சந்தித்து என்னை ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தினாலே – ஆமேன்.

---

*சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது*

சங்கீதம் 34:10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

மார்ச் 20

புதன்

## ஆபத்திலே எம்மை உயிர்ப்பிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் 01 - 02

**"நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர், என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர், உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்."** (சங்கீதம் 138:8)

அன்புத் தேவபிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு நன்நாளாகட்டும் என பிராத்திக்கிறேன். "உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று கூறிய எம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இன்றும் இந்த நிமிடத்திலும் இந்த நேரத்திலும் உங்களோடும் என்னோடும் இருப்பதை உங்கள் முழு உள்ளத்தோடு விசுவாசியுங்கள். அப்படியே நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனின் ஆவியானவர் உங்களுக்குள்ளே வாசமாயிருக்கிறதை அறியாதிருக்கிறீர்களா? என ஆண்டவருடைய வசனத்திலே எழுதப்பட்டிருக்கிறது. அவரால் எழுதப்பட்ட ஒரு வசனமேனும் விருதாவாய் அல்ல. செயலிழந்தவைகள் அல்ல. சந்தேகமின்றி அவரது எல்லா வசனங்களும் நாம் விசுவாசிக்ககூடியவை.

தேவபிள்ளைகளே, பரிசுத்த வேதாகமத்திலே யோசுவா 1:5 இலே தேவன் எம்மை விட்டு விலக மாட்டார் என்றும் எம்மை கைவிடமாட்டார் எனவும் பொருத்தனைபண்ணியிருக்கிறார். அதை எவராலும் மாற்ற முடியாது எனவும் நீங்கள் ஆழமாக விசவாசிக்க வேண்டும். மனிதனுடைய உள்ளம் பெலவீனமடையும்போது அதை உயிர்ப்பிக்க பூமிக்குரிய எந்த மனிதனுக்கும் முடியாது என்பதை நாம் நன்றாக அறிவோம். இருப்பினும் உள்ளத்தை பெலப்படுத்தி திடப்பத்தி எல்லா முறையிலேயும் எம்மை நிமிர்ந்து நிற்கச்செய்ய எம்முடைய தேவனுக்கு முடியும். ஏனெனில் மேலே பிரதான வசனத்திலே எழுதப்பட்டிருப்பதும் "நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்" என்பதாகவே. நீங்கள் இந்த வேத வசனத்தை விசுவாசியுங்கள். உங்களுக்கு என்ன ஆபத்துக்கள், பிரச்சினைகள் வந்தாலும் அவையெல்லாவற்றிலும் உங்கள் தேவனாகிய கர்த்தரை குறித்து மாத்திரம் விசவாசியுங்கள். இன்றைய நாளில் உங்களுக்கு ஏதாவதொரு பிரச்சினைகளுக்கு, இன்னல்களுக்கு, சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுமா? நீங்கள் பயப்பட வேண்டாம் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடிருந்து உங்கள் உள்ளத்தை பெலப்படுத்தி உங்களைத் திடப்படுத்தி உங்கள் சவால்களுக்கும் நீங்கள் முகங்கொடுத்து அதிலிருந்து வெற்றியைப்பெற உங்களை உயிர்ப்பிக்கிறார். அவர் உங்களுக்கூடாக மேன்மைக்கும் மகிமைக்கும் பிரியப்படும் தேவன். ஆதலால் என்றுமே அவர் உங்களை வெட்கப்படுத்த இடமளிக்க மாட்டார்.

தேவபிள்ளைகளே, ஆபத்து முன்னறிவிக்காதபடி உங்கள் மீதும் என் மீதும் வருவதை நாம் நன்கு அறிவோம். ஆனாலும் எம்மை அழைத்த தேவன் நம்மீது வர முன்பதாகவே அது எப்பொழுது எப்படியாக வரும் என்பதை அறிந்திருக்கிறார். ஆகையால் "எனக்கு ஆபத்து எவ்வழியிலே வரும்" வரும் என்பதை நினைத்து அதைப்பற்றியே நினைத்துக்கொண்டிருப்பதைவிட உங்கள் அபத்து உங்களை நோக்கி வர முன்பதாகவே அதை அறிந்த தேவன் மீது உங்கள் உள்ளத்தை செலுத்துங்கள். வெற்றியின் நாள்!.



**என்னுடைய பிதாவே, ஆபத்திலே நீர் என் ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் தேவன். என்னை நோக்கி வரும் எல்லா ஆபத்துக்களையும் நீர அறிவீர். பிதாவே அந்த ஆபத்துக்கள் நடுவே நீர் என்னோடு கூட வாசம் செய்யும். எனது உள்ளத்தை பெலப்படுத்தி அதிலிருந்து என்னை விடுதலையாக்கும். இயேசுவின் நாமத்தினால் – ஆமேன்.**

---

பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்.
அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். நானே தேவன் வேறொருவரும் இல்லை.

ஏசாயா 45:22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 21

வியாழன்

## மிக வல்லமையான
## அதி விசேடமான
## தேவனுடைய வசனம் !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர்
03 - 04

**"லாசரஸ் வெளியே வா என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான்."** (யோவான் 11:43-44)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் உங்களுக்கு வெற்றிகரமான நாளாக வேண்டுமென்று வாழ்த்துகிறேன். தேவன் நாம் போகவேண்டிய பாதையை எமக்குச் சொல்லி கொடுத்து, அப்பாதையில் எம்மை வழிநடத்தி செல்கிறார். அப்படியே எமக்கு ஆபத்து பிரச்சினை ஏற்படுவதற்கு முன்னரே அறிவித்து அதிலிருந்து எம்மை மீட்டுகொள்கிற தேவன். ஆகையால் சர்வ வல்லமை பொருந்திய தேவனின் உரிமையான பிள்ளையாக தேர்ந்தெடுத்து, எங்களை வேறுபடுத்திக் கொண்டுள்ளமையால் நாம் உண்மையிலேயே அதிஷ்டகாரர்கள் ஆவோம்.

தேவ பிள்ளைகளே நீங்கள் கலங்காதிருங்கள். உங்கள் தேவனின் வாயிலிருந்து புறப்படுகிற சகல வசனங்களும் மிகவும் வல்லமையுள்ளவைகள். தேவப்பிள்ளைகளே பரிசுத்த வேதாகமத்தில் நூற்றுக்கதிபதியைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நாள் அவன் இயேசுவின அருகே வந்து ஆண்டவரே எனது வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தைப்படுகிறான் என்றான். அப்பொழுது இயேசு சுவாமி வந்து அவனை சுகப்படுத்துவேன் என்று கூறினார். அப்பொழுது அவன் அதற்கு பதிலாக ஆண்டவரே நீர் என் வீட்டிற்கு வர நான் பாத்திரனல்ல ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லியருளும் அப்பொழுது எனது வேலைக்காரன் குணமடைவான் என்றான். அப்பொழுது இயேசு அவனைக் கூப்பிட்டு உன்னுடைய விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது என்றார். தேவ பிள்ளகைளே இயேசு கூறிய அக்கனமே நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் குணமடைந்தான். தேவன் அன்றும் இன்றும் சதாகாலமும் மாறாதவராக, கிரியைச்செய்பவராக இருக்கிறார். நீங்கள் மனம் சோர்வடையாதிருங்கள்! உங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்து உங்களை மிகவும் நேசிக்கிறார். தேவனிடம் நீங்கள் ஒன்றைக் கேட்டால் தேவன் தமது நாமத்தில் அதை உங்களுக்குக கொடுப்பார் என்றும், இதுவரை என்னுடைய நாமத்தில் நீங்கள் ஒன்றையும் கேட்கவில்லை நீங்கள் சந்தோஷத்தோடு மனப்பூர்வமாகக் கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று தேவன் பொருத்தனை பண்ணியுள்ளார்.

தேவ பிள்ளைகளே, உங்கள் ஜீவனைக் குறித்தும் உங்கள் பிள்ளைகளின் ஜீவனைக்குறித்தும் பேரப்பிள்ளைகளின் ஜீவனைக்குறித்தும் தேவன் இப்பொழுது கூட முழு பொறுப்புகளையும் தானே ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதை முழு மனதுடன் விசுவாசியுங்கள். இயேச நாதர் லாசருவின் கல்லறையருகே சென்று "லாசரு வெளியே வா என உரத்த சத்தமாய் கூப்பிட்டார்" அப்பொழுது கை கால் துணிகளால் கட்டி, முகம் துணியால் சற்றப்பட்டு கிடந்த லாசரஸ் எழும்பி வெளியே வந்தார் இதன் விசேஷத்தன்மை என்னவெனில் தேவன் மரித்தவரின் பெயர் சொல்லி வெளியே வா என்றமையாகும். ஏனெனில் உயிரற்ற சடலத்திற்கு வெளியே வா எனச் சொல்வாராகில் உரியவரான பெண்கள் அல்லது ஆண்களின் பெயர் குறிப்பிடப்பட்டமையால் எல்லா சடலங்களும் கல்லறையிலிருந்து வெளியே வர தேவனின் வாயிலிருந்து வருகின்ற வசனம் வல்லமையுடையது. தேவனது ஒரு வார்த்தையிலும் உங்கள் வாழ்க்கையை மாற்ற முடியும். இது வெற்றிகரமான நாள்.



என் பிதாவே, நீங்கள் வல்லமையான தேவன். உங்கள் குமாரனான இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சொல்லி நாங்கள் ஜெபிக்கும் போது நீங்கள் அவர்களுக்கு பதில் கொடுக்கிறீர்கள். தேவனே வசனமானது வல்லமையாக கிரியை செய்வதினால் ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் ஆமேன்.

---

அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது
வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல்,
அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.
ஏசாயா 55:11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

மார்ச் 22

வெள்ளி

## மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்தில் !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் 05 - 06

**"மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும் அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்"** (நீதிமொழிகள் 18:21)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே, இன்றும் ஜீவிக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு நல் நாளாக வேண்டுமென வாழ்த்துகிறேன். பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமம் 1:26 தேவ வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி உங்களையும் என்னையும் எங்கள் தேவனானவர் தமது சாயலுக்கு ஒப்பாக உருவாக்கியிருப்பதால் நானும் நீங்களும் அதிஷ்டசாலிகள். சில வீடுகளில் இரண்டு பிள்ளைகள் அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருப்பதை நாங்கள் காண்கிறோம். அவர்களில் மூத்த மகன் அல்லது மகள் அப்பாவை போல என்றும் அப்படி இல்லாவிடின் இரண்டாவது அல்லது அதினிலும் பிற்பாடுள்ள பிள்ளைகள் அப்பாவைப்போல் அல்லது அம்மாவைப்போல என்று கூறுவதை நாம் கேட்டுள்ளோம். எல்லா மனிதரும் தேவனின் சாயலாக பிறந்திருக்கிறார்கள். ஆனாலும் தேவனுடைய சொந்த பிள்ளையாகிய எங்களுக்கு தேவனுடைய ஆவியைக் கொடுத்து தேவனுடைய சுபாவத்தோடு தேவனைப் போன்று எங்களை ஆவியிலே வேறுபடுத்தியுள்ளார். ஆகையால் இப்புவியிலே வாழ்ந்தாலும் எங்களைத் தேவன் தேவ ஆவியினாலே அவருடைய சாயலுக்கு வேறுபடுத்தி இப்பூமியிலே ஆசீர்வாதமுடையவர்களாக உயர்த்தப்பட்ட நாம் தேவனாலே மெய்யாகவே மிகவும் பாக்கியம் பெற்றவர்களாயிருக்கிறோம்.

தேவ பிள்ளைகளே, தேவனை அறிந்து அவரைப் பின்பற்றும் நீங்கள் காண்பதால் அல்ல விசுவாசத்தினால் மாத்திரம் ஜீவிக்கிறீர்கள் என்பதை தேவன் வசனத்தினால் வெளிப்படுத்தியருப்பதை பரிசுத்த வேதாகமத்தில் காண்கிறோம். தேவ பிள்ளைகள் முதலாவது காண்கிறார்கள் இரண்டாவது விசுவாசிக்கிறார்கள் என்று அல்ல. அது உலகத்தவரது சுபாவமாகும். ஆனால் தேவ பிள்ளைகளது சுபாவம் என்னவெனில் முதலாவது மனதில் அவரை விசுவாசித்து வாயினால் அறிக்கை செய்தல், இரண்டாவதாக காணுதல் ஆகையால் தேவ பிள்ளைகளாகிய நீங்கள் அவைகளை இப்படியாக கூறுகிற வேளையில் அது நடக்குமா? எனக்கென்றால் அவைகளை குறித்த விசுவாசமில்லை அவைகள் நடைபெறாது இப்படியான விசுவாசமற்ற வசனங்கள் வாயிலிருந்து புறப்படாத வண்ணம் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். உங்களிலிருந்து மாத்திரமல்ல உங்கள் குடும்பத்தில் அனைவரினதும் வாயிலிருந்து தேவனின் மகிமையை உயர்த்தும் வார்த்தைகள் வெளிவர வேண்டுமென தேவன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆகையால் முதலில் விசுவாசியுங்கள். இரண்டாவதாக கண்களில் காண்பீர்கள் ஏனெனில் பரிசுத்த யோவான் 11:40 இலே இயேசு சுவாமி மார்த்தாள் மரியாள் இரண்டு பேருக்கும் கூறியதாவது நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய் என்று கூறினார்.

தேவ பிள்ளைகளே, உங்கள் வாயினின்று விசுவாச வார்த்தைகளை வெளிப்படுத்துங்கள். நன்மையும் தீமையும் உங்கள் நாவில் உள்ளது. ஆகையால் எனக்கு சரியான கஷ்டம் பிரச்சினைகள் முடியவில்லை என எவ்வேளையிலும் முறுமுறுக்காதீர்கள். வெற்றிகரமான வசனங்களை மாத்திரம் வெளிப்படுத்துங்கள். தோல்விகளை பற்றிக் கதைப்பதை இன்றோடு நிறுத்திவிடுங்கள். அசுபமானவைகளை பேசுவதை நிறுத்தி சுபமானவைகளையே கூறுங்கள். இன்றும் வெற்றிகரமான நாள்!



என்னுடைய பிதாவே, நீங்கள் வல்லமையான தேவன் உங்கள் வசனம் வல்லமையானது. உயிருள்ளது உங்கள் வாயின் வார்த்தையால் முழு உலகத்தையும் சிருஷ்டித்தீர்கள் இன்றும் உங்கள் வசனம் செயல்படுகிறது. என் வாயை உங்களிடம் ஒப்புக்கொடுக்கிறேன். காத்துக்கொள்ளும் இயேசுவின் நாமத்தில் ஆமேன்.

---

தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனை காக்கிறான்,
தன் உதடுகளை விரிவாயத் திறக்கிறவனோ கலக்கமடைவான்
நீதிமொழிகள் 13:3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 23

சனி

## அனைத்தும் நிலையற்றதானாலும் தேவன் உங்களோடு !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் 07 - 08

**"சூரியனுக்கு கீழே செய்யப்படும் கிரியையெல்லாம் எனக்கு விசனமாயிருந்தது. எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது"** (பிரசங்கி 2:17)

கர்த்தரால் எனக்கு கிடைக்கப்பெற்ற தேவ பிள்ளகைளே இன்றும் மகத்துவமான தேவனின் புத்திரரான இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு இனிமையான காலைப்பொழுதாகட்டும் என கூறி உங்களுடைய இல்லத்திற்கு வருகை தந்துள்ளேன். இரண்டு கோடியே மூன்று இலட்சத்து இலங்கை வாசிகளிடையில் உங்களையும் என்னையும் தமது சொந்த இரட்சகராக தெரிந்துகொண்ட சர்வ உலகத்தையும் படைத்த தேவனுக்கு நான் நன்றி கூறுகிறேன். தேவனின் அன்பை அறியாமல் இருக்கின்ற அநேக ஜனங்களிடையில் நீங்களும் ஒருவராக இருக்கலாம். மேற்கூறிய வசனத்தின்படி சூரியனுக்கு கீழே நடைபெறும் அனைத்தம் நிலையில்லாத படியால் சஞ்சலம் நிறைந்ததாயுள்ளது என விசுவாசிக்கும் ஒருவராயிருக்கலாம். எவ்வளவு முயற்சி செய்திடினும் கிடைக்கும் பிரதிபலன்கள் எந்நிலையிலும் நன்மையில்லாதது என நீங்கள் காண்கிறவராக இருக்கலாம்.

தேவபிள்ளைகளே காலையிலே தமது வேலை சம்பந்தமாக வெளியேற நினைத்துக்கொண்டிருக்கும் நீங்கள் நேற்று போல் இன்றும் வல்லமையாக உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கிறது என்று எண்ணுகிறீர்கள் இல்லையா? பிள்ளைகளது வேலை அதன் பின் கணவனது மனைவியின் கடமை அதன் பின் பெற்றோர்களின் கடமைகள் போன்ற அதிகமான பொறுப்புக்கள் உங்களை எதிர்நோக்கியுள்ளது. அவைகள் எவ்வளவு செய்தாலும் அவ்வளவும் நிலையற்றதென்றும் உங்களுக்கு தோன்றக்கூடும். இந்த பிரச்சினைகள் உபத்திரவங்கள், மானசீகமான கட்டுகள் ஒன்றுக்கு பின் ஒன்றாக கடல் அலைகளைப் போல் உங்கள் வாழ்க்கையில் வந்துக்கொண்டிருக்கிறதா? வழமையான உங்கள் வாழ்வில் அன்பின் குரல் கேட்காதபடியினால் இந்த நரக வாழ்க்கை எனக்கு வேண்டாம் என்று உங்கள் இருதயம் கலங்கலாம். ஏனெனில் எல்லாமே மாயையாக இருக்கிறது. உங்கள் செலவுக்கான போதிய வருமானம் இல்லையென கதி கலங்கலாம். கடன்களை செலுத்த முடியாதபடி எடுக்கிற முயற்சிகளும் தோல்வியடையும் போது தெய்வமென்று ஒருவர் இவ்வுலகில் இருக்கிறாரா என உங்கள் அடிமனம் கூறலாம்.

தேவ பிள்ளைகளே மேற்கூறியவைகள் உங்கள் உண்மை நினைவலைகளாகும். ஆனாலும் எல்லாவற்றிற்கும் மேலான உண்மையானதென்னவெனில் இந்த நிலையற்றவைகளின் மத்தியில் வெற்றி தர முடியுமான அப்படியே எல்லா தீமைகளையும் நன்மையாக மாற்றக்கூடிய உங்கள் பிரச்சினைகளை தீர்த்து வைக்கக்கூடிய இயேசு என்னும் மகா பராக்கிரமசாலி உங்களினதும் எனதும் வாழ்க்கையில் அரசாட்சி செய்வதும் உண்மையாகும். ஆனாலும் எங்களில் அனேகர் இயேசுவுக்கு இடங்கொடாமல் தமது வாழ்க்கையில் வரும் பிரச்சினைகளை பார்த்து பயப்படுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளார்கள். நீங்கள் அப்படிச் செயயாதிருங்கள். நிலையற்றதற்கு மேலாக வெற்றியை கொண்டு வரும் இயேசு சுவாமி உங்களோடிருப்பாராக! வெற்றியின் நாள்.



என் பிதாவே எல்லாமே மாயையாக தென்படுகிறது. தேவனே நீர் எம்மோடு கூட இருப்பதால் சகலவற்றிலும் வெற்றி காண்கிறேன். என்னுடைய கசப்பான வாழ்வை இனிப்பாக மாற்றும். எனக்குத்துணையாக வேண்டுமென இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

---

கர்த்தர் உன் களஞ்சியங்களிலும் நீ கையிடும் எல்லா வேலைகளிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார். உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார். உபாகமம் 28:8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 24

ஞாயிறு

**பயப்படாதே
நான் உன்னை
மீட்டுக்கொண்டேன் !**

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர்
09 - 10

**“நான் உம்மை நோக்கி கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி பயப்படாதே என்றீர்”** (புலம்பல் 3:57)

எனது அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கிற இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு சுப நாளாகட்டும் என்று வாழ்த்துகிறேன். தேவ பிள்ளைகளே மனித வாழ்க்கையானது வண்ணாத்திப்பூச்சைப்போன்றது. வண்ணாத்துப்பூச்சு மிகவும் அழகானதும், வண்ணங்கள் நிறைந்ததும் அதே போன்று மிகவும் பலவீனமானது ஏனெனில் சிறிது நேரத்தில் அழிந்து போய்விடும். அதேப்போல் மனித வாழ்வும் மிகவும் அழகானது போன்றே பலவீனமுள்ளது. அதேப்போல் சிறிது காலத்திலேயே அழியக்கூடியது. இவ்வாறு மனித வாழ்வை பெற்றுக்கொண்ட நீங்களும் நானும் எல்லோரும் எங்கள் வாழ்க்கையில் இறுதி வரை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய வல்லமையான தேவனைக்குறித்து தெரிந்துகொண்டு தேவன் பேரில் விசுவாசமுள்ளவர்களாய் வாழ்க்கையில் எத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும் பூமியில் எல்லாவற்றிலும் தோல்விகள் ஏற்பட்டாலும் எங்களுக்கு எல்லாவற்றிலும் வெற்றியை பெற்றுதர முடிந்த வல்லமையான தேவனோடு வாழ்க்கையில் பயணம் செய்கின்ற நாம் பாக்கியவான்கள் ஆவோம். ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவோம். உங்கள் கண்கள் காண்பவைகளுக்கு உங்கள் அவதானத்தைச் செலுத்தாமல் உங்கள் பரலோக பிதா உங்களுக்குக் கொடுத்த பொருத்தனை, தேவ வசனங்களைக்குறித்து நீங்கள் எல்லா வேளையிலும் ஞாபகபடுத்தித் தியானியுங்கள்.

தேவபிள்ளைகளே, மேற்கூறப்பட்ட புலம்பலில் 3:57 தேவ வசனத்தில் நான் தேவனை நோக்கி ஜெபிக்கும் வேளையில் தேவன் எனக்குப் பயப்பட வேண்டாம் என்று கூறினாரென எழுதப்பட்டுள்ளது. உண்மையிலேயே தேவன் நாங்கள் பெரிய பிரச்சனை, சஞ்சலங்கள், ஆபத்திற்கு முகங்கொடக்க வேண்டிய நேரமாகவிருந்தாலும் நாங்கள் அழுது எமது துக்கங்களை முறையிடும் வேளையிலும் தேவன் மனிதர்களான எமக்காக மிகவும் குழப்பமடைந்து பரத்திலிருந்து இறங்கி வந்து ஐயோ மகனே உனக்கு என்ன நடந்தது? என்று தேவன் எங்களிடம் விசாரிக்க மாட்டார். ஏனென்றால் அந்த பிரச்சினைகளுக்கு முடிவு என்ன? என்று தேவன் நன்றாக அறிந்தவராக இருக்கிறார். உங்களுடைய தேவன் உங்களுக்கு பொருத்தனை பண்ணியுள்ளபடியே திராணிக்கு மேலதிகமாக சோதனைகள் உங்களை அணுக இடங்கொடுக்க மாட்டார். உங்கள் பிரச்சினை உங்கள் தலைக்கு மேல் பெருகியோடும் தண்ணீர் வெள்ளத்தைப்போல் உங்களுக்குத் தெரியக்கூடும். ஆனாலும், உங்கள் தேவனானவர் உங்களுக்கு கொடுக்கும் பதில் என்னவெனில் மகனே பயப்பட வேண்டாம், நான் உன்னோடு இருக்கிறேன் என்பதாகும்.

தேவ பிள்ளைகளே, உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக. அந்த அதிகாரத்திலேயே 58 வது தேவ வசனத்தில் ஆண்டவரே என் ஆத்துமாவின் வழக்கை நடத்தினீர். என் பிராணனை மீட்டுக்கொண்டீர் என்று எழுதப்பட்டுள்ளது உங்கள் தேவனின் கருணையை நீங்கள் அதிகமாக பெற்றுக் கொள்ளும் படியாக எந்நேரமும் அவரை நினைத்துக்கொள்ளுங்கள். இடைவிடாது ஜெபியுங்கள் உங்கள் உள்ளத்தைத் தைரியப்படுத்திக் கொள்ளுங்கள். இன்றைக்கு நீங்கள் முகங்கொடுக்க வேண்டிய சகல பிரச்சினைகளையும் உங்கள் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். வெற்றிகரமான நாள்.



என் பிதாவே, நீங்கள் எங்களுக்கு பதில் கொடுக்கும் தேவன். எங்கள் ஆபத்தில் பிரச்சினை, சஞ்சலங்களில் நாங்கள் ஜெபிக்கும்போது எங்களை பயப்பட வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள். இன்றைய நாள் உங்கள் கரங்களில் ஒப்புக்கொடுக்கிறேன். நீங்கள் என்னோடு இருப்பீர்களாக! இயேசுவின் நாமத்தில் ஆமேன்.

---

இப்போதும் யாக்கோபே உன்னை சிருஷ்டித்தவரும் இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது, பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன் உன்னை பேர் சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவன். ஏசாயா 43:1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

மார்ச் 25

திங்கள்

## தேவன் எதிர்பார்க்கும் காணிக்கை !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் 11 - 12

**"அவர் கண்ணேறிட்டுப் பார்த்த போது ஐசுவரியவான்கள் காணிக்கை பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார்"** (லூக்கா 21:1)

அன்பானவர்களே தேவனுக்குள் இன்றும் உங்களுக்கு சுப நாளாகட்டும் என வாழ்த்தி உங்கள் இல்லத்திற்குள் பிரவேசிக்கிறேன். தேவப்பிள்ளைகளே உங்களையும் என்னையும் தன் சொந்த ஜனங்களாக தேர்ந்தெடுக்க தன்னுடைய முழு வாழ்க்கையையும் பலியாக ஒப்புக்கொடுத்த இயேசு சுவாமியின் பலியானது எவ்வளவு பெறுமதியானது? அது தேவனுக்கு முன்னிலையில் தெரிவுசெய்யப்பட்ட வம்சத்திற்காக குமாரனாகிய இயேசுவின் அதி மேன்மையான காணிக்கை. உலகில் எந்தவொரு தெய்வமும் தம்மைத்தாமே பலியாக்கவில்லை. ஆனாலும் தேவன் மனித உருவெடுத்து இந்த பூலோகத்திற்கு வந்து உங்களுக்குக்காகவும் எனக்காகவும் பலியானார்.

மேலே குறிப்பிட்டுள்ள அதிகாரத்தில் 2ம், 3ம், 4ம் வசனங்களில் இயேசு கூறுகிறார் ஏழை விதைவைப்பெண் போட்ட காசு மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமானது என்றாகும். தேவ பிள்ளைகளே, காணிக்கை என்பது தேவனுக்கு சொந்தமானதாகும். மனுஷன் தனக்கு சொந்தமானவைகளை பணத்திலே அளவிட்டாலும் அதை தேவனுக்கு கொடுத்த பின்பு அது மனுஷனுக்கு சொந்தமல்ல. அப்படியானாலும் தேவ பிள்ளைகளே, இன்றைய நாளிலும் தேவனுக்கு கொடுக்கும் காணிக்கை யாது? நீங்கள் தேவனுக்கு எவ்வளவு உடமைகளை செலுத்தினாலும் அதின் பலன் கிடைக்காது. தேவனுக்கு தேவைப்படுவது உங்களது உள்ளமாகும். நீங்கள் வெளித்தோற்றத்தில், அந்தரங்க வாழ்க்கையில் அசுத்தம் நிறைந்தவராக இருப்பினும் தேவன் உங்களை நன்றாக அறிந்தவராக இருக்கிறபடியால் உங்கள் உள்ளம் இப்போது இருக்கின்ற நிலையிலேயே அதை தேவனுக்கு பலியாக கொடுங்கள். தேவன் விதவையின் சிறு காணிக்கையை பார்க்கவில்லை. அவரது உள்ளத்தை பார்த்தார். விதவை அவளுடைய அனைத்தையும் பலியாக அர்ப்பணிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் ஏதேனும் தேவனுக்கு முழுமையாக அர்பணிப்பதென்றால் எங்களுக்கு அசைக்க முடியாத விசுவாசம், நம்பிக்கை பரிசுத்தம் இருக்க வேண்டும்.

இந்த காலை வேளையிலே உங்கள் உள்ளம் எப்படி இருக்கிறது? உங்களை அண்மித்திருக்கும் பிரச்சினைகள், மானசீகமான உபத்திரவங்கள், துக்கம், வேதனைகள், நிந்தை, அவமானம், ஆகியவற்றால் உள்ளம் அசுத்தம் நிறைந்ததாக இருக்கலாம். நான் தேவனிடம் எப்படிப் போவேன் என்று உங்கள் உள்ளம் கதறி அழலாம். ஆனாலும் உங்கள் முழு உள்ளத்தோடு அவரண்டையில் வருவீர்களானால், விதவையின் உள்ளத்தைக் கண்ட ஜீவிக்கிற தேவன் இன்றும் உங்கள் உள்ளத்தை பொறுப்பேற்றுகொள்ள அன்போடு ஆயத்தமாக இருக்கிறார் ஏனென்றால் தேவனுக்கு கொடுக்கப்படும் பலியென்றால் நொறுக்கப்பட்ட உடைந்த உள்ளம். அப்படியே அசுத்தமான உள்ளங்கள் அது தேவனுடைய இரத்ததினால் பரிசுத்தமாக்கப்பட்டு தேவனால் பொறுப்பேற்றுக்கொள்ளப்படும். மீண்டுமாக சாத்தான் உங்களை அசுத்தமாக்காதபடி உங்கள் ஆத்துமாவை காத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள் தேவன் உங்களோடு ஜீவிக்கிறவராக இருக்கிறார். இனறைய தினத்திலும் தேவனுடைய அன்பு எந்நிலையிலும் குறையாத வண்ணமாக இருப்பதாக! இன்று வெற்றி உங்களுக்கே!



என் தேவனே, நீங்கள் என் தேவன். உங்களுக்கு கொடுக்க வேண்டிய பலியென்றால் உடைந்த உள்ளமே. நான் அதை குறைவாக எண்ணவில்லை. பிதாவே என் உள்ளத்தை பலியாக தருகிறேன். என்னை பரிசுத்தமாக்கி சுகப்படுத்துங்கள். இயேசுவின் நாமத்தில் ஆமேன்.

---

என் மகனே உன் இருதயத்தை எனக்கு தா உன் கண்கள் என் வழியை நோக்குவதாக

நீதிமொழிகள் 23:26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
மார்ச் 26
செவ்வாய்

## எலியாவிந்து வாழ்க்கை கசந்த வேளை ஆறுதல்படுத்திய தேவன் !


இன்றைய வேதவாசிப்பு
1 கொரிந்தியர் 13 - 14

**"ஒரு சூரைச் செடியின் கீழ்படுத்துக்கொண்டு நித்திரை பண்ணினான் அப்பொழுது ஒரு தூதன் அவனை தட்டியெழுப்பி எழுந்திரு போஜனம் பண்ணு என்றான்."** (1 இராஜாக்கள் 19:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே ஜீவிக்கிற இயேசு சுவாமியின் நாமத்தில் இன்று வாழ்த்துகிறேன். மனிதன் எங்களது முகத்தைப் பார்க்கிறான். உங்களது எனது தேவனோ எமது உள்ளத்தை பார்க்கிறார். எங்கள் உள்ளத்தை ஆராய்கிற தேவன், எங்கள் ஆத்துமாவை காத்துக்கொள்ளவும் எம்மை முன்னோக்கிய பயணத்தை மிகவும் பாதுகாவலோடு முன்னோக்கிக் கொண்டு செல்ல வல்லமையான தேவனைப்பற்றி அறிந்துகொண்டு தேவன் பேரில் விசுவாசம் வைத்து தேவனோடு கூட விசுவாசத்தோடு முன்னோக்கி செல்லும் நாம் எவ்வளவு பாக்கியவான்கள் என ஒரு முறை சிந்தித்துப் பாருங்கள். மனிதர்கள் தமது உள்ளத்தில் உபத்திரவங்கள், போராட்டங்கள் அதிகமாகும் வேளை அவர்களது துக்கத்திற்கு வேதனைக்கு, பிரச்சினைகளுக்கத் தீர்வாக அவர்களை தற்கொலை செய்து கொள்ளவும் முயற்சிப்பார்கள். ஆனாலும் நீங்கள் எவ்வளவு அதிஷ்டசாலிகள். ஒரு ஆரை மணி நேரம் நீங்கள் என் தேவனே என் பிதாவே என்று தேவனின் பாதத்திலிருந்து ஜெபிக்கும் வேளை உங்கள் துக்கம் வேதனை சோர்வு, முதன் முதலாக நீக்கி விட உங்கள் சமாதானத்தினால் நிரப்பவும் உங்கள் தேவன் வல்லமையுடையவர்.

தேவ பிள்ளைகளே எலியா என்பவர் வல்லமையான தீர்க்கதரிசியாவார். அவர் தேவனது வசனத்திற்கூடாக கர்மேல் பர்வதத்தில் வானத்திலிருந்து அக்கினி இறக்கி முழு சமாரியா தேசத்தையும் இஸ்ரவேல் தேவனின் பக்கம் திரும்பிய அதிபிரபல்யமான தீர்க்கதரிசியாவார். ஆனாலும் அவர் அப்படி வானத்திலிருந்து அக்கினியை இறக்கி இஸ்ரவேலின் சேனைகளின் கர்த்தர் ஜீவிக்கும் உண்மையான தேவன் என்பதனை நிருபித்ததன் பின்னர் இஸ்ரவேலின் இராஜாவான ஆகாப்பின் மனைவியான யெசபேல் எலியாவினால் அவளது பாகால் தெய்வத்தின் தீர்க்கதரிசிகள் கொல்லப்பட்டதைக் கேட்டு அவள் எலியாவை கொல்லுவதற்காக ஏவளாலன் மூலம் எலியாவுக்கு அறிவித்தாள். அதைக் கேட்ட எலியா யெசபேலுக்கு பயந்து தன்னுடைய பிராணனை காத்துக் கொள்ளும்படியாகச் சென்று வனாந்திரத்தில் ஒரு சூரைச் செடியின் கீழ்ப்படுத்துக் கொண்டான். அப்போது தேவன் ஒரு தேவதூதனை அனுப்பி மீண்டுமாக தைரியப்படுத்தினார். எலியாவின் இரண்டாவது கட்டத்தில் இராஜாக்களை அபிஷேகம் செய்வதற்கும் தேவன் எலியாவை வல்லமைப்படுத்தினார்.

தேவ பிள்ளைகளே, உங்கள் வாழ்க்கையில் இருக்கின்ற பிரச்சினைகள், சஞ்சலங்களால் நீங்கள் வாழக்கையில் கதி கலங்கி இருக்கிறீர்களா? உங்கள் தேவன் உங்கள் இருதயத்தை பாக்கிற தேவனாயிருக்கிறபடியினால் உங்கள் வாழ்வில் இருக்கும் கசப்புகள் எல்லாம் உங்கள் தேவன் நன்கு அறிந்தவராக இருக்கிறார். எலியாவை ஆறுதல் படுத்திய தேவன் இன்று உங்களை ஆறுதல் படுத்துவாராக! இன்று வெற்றியின் நாள்.



என் பிதாவே நீங்கள் எலியாவின் தேவன், நீங்கள் எனது தேவன்! அன்று எலியாவின் வாழ்க்கை கசப்பான வேளை உங்களை நோக்கி ஜெபித்த போது தேவதூதனை அனுப்பி ஆறுதல்படுத்தியதும் நீங்களே. தேவனே எனது இருதயத்தை காண்கிற தேவன். நீங்கள் என்னை தைரியப்படுத்துங்கள் இயேசுவின் நாமத்தினால் ஆமேன்.

---

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி மகா வரட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலான் தோட்டத்தை போலவும் வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் ஏசாயா 58:11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 27

புதன்

# தீமைகளை நன்மையாக மாற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் 15 - 16

**"அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தன் முக நாடியை வேறுபடுத்தி அவர்களிடத்தில் பித்தங் கொண்டவன் போலக் காண்பித்து வாசற்கதவுகளிலே கீறிக் கொண்டிருந்து தன் வாயியலிருந்து நுரையைத் தன் தாடியில் விழப்பண்ணிக்கொண்டிருந்தான்."**
(1 சாமுவேல் 21:13)

அன்பான தேவ பிள்ளைகளே! எங்கள் ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இன்று நன்மையும் முன்னேற்றமும் நிறைந்த நாளாக வேண்டுமென பிரார்த்திக்கிறேன். மனிதன் இவ்வுலகில் காணப்படும் தொழிநுட்பக் கருவிகளில் பரிசோதனை நடாத்தி தான் திறமையானவன், பிரசித்தம் பெற்றவன், ஞானவான் என்றும் மற்றவர்களுக்கு தன்னைப்பற்றி அறிமுகப்படுத்துவதற்கு மிகவும் விருப்பமுள்ளவனாய் இருப்பான். ஆனாலும் எங்களுடைய கர்த்தருடைய உன்னத ஆவியை கிட்டிச் சேர்ந்து தேவனின் அன்பிலும் இரக்கத்திலும் பூரணமான மனித உருவத்தில் உலகத்தில் தோன்றி மனிதர்களின் பாவங்கள் காரணமாக தன்னையே பலியாக கொடுத்த அந்த உன்னதமான அன்பைக்குறித்தும் தெரிந்துகொள்வதற்கு அவர்களுக்கு அறிவுத் திறமை இல்லை. அவர்களுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது இன்றைய ஜீவ மன்னா தின தியானத்தை வாசிக்கிற நீங்கள் எவ்வளவு அதிஷ்டகாரர்கள் நீங்கள் இன்னும் தேவனைப்பற்றி அதிகமாக ஆழமாக தெரிந்துகொள்ள இன்னுமாக தேவனின அன்பை ருசித்துப் பார்க்க முயற்சி செய்பவராயின் நீங்கள் மிகவும் அதிஷ்டசாலியாவீர்கள்.

தேவபிள்ளைகளே மனிதனது உள்ளத்தோடு மிக நெருங்கி கிட்டிச் சேர்ந்திருக்க தேவன் மிகவும் பிரியமுள்ளவராயிருக்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் கலாத்தியர் 5:17 இல் எழுதியுள்ளதன் பிரகாரம் "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது." இந்த போராட்டங்களின் போது மனிதனானவன் தேவ பாத்திலிருந்து ஜெபம் செய்யாமல் ஆத்துமாவை உருவாக்கிய தேவனின் வல்லமையை பெற்றுக்கொள்ளாமலிருப்பின் மாம்சத்துக்கும் ஆவிக்கும் இடையில் ஏற்படும் யுத்தத்தில் மனிதன் தோல்வியுற்று தேவனிடமிருந்து தூரமாய் போய்விடுவான். நீங்களும் உங்கள் ஆத்மீக யுத்தத்தில் உங்கள் சுய பெலத்தினால், ஆற்றலினால் யுத்தம் செய்யாமல் உங்கள் தேவனின் கரத்திற்கு உங்கள் யுத்தத்தை ஒபபுவித்து தேவனின் தேவ ஆவியில் பராக்கிரமசாலியாக நீங்கள் மாறுங்கள். தேவன் யுத்தத்தில் மிகவும் வல்லமையுடையவராவார்.

தேவ பிள்ளைகளே, மேற்கூறப்பட்ட முக்கியமான வேதாகம வசனமான 1 சாமுவேல் 21:13 இல் வசனத்தில் குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பத்தில் தாவீதுக்குள் தேவனுடைய அபிஷேகம் இருந்தது. தேவன் அவரை இஸ்ரவேலின் ராஜாவாக ஏற்படுத்த "தாயின் கர்ப்பத்தில் தெரிந்துக்கொண்டார்" தாவீதுக்குள் அபிஷேகம் இருந்த போதிலும் மனிதர்கள் முன்பாக வாயிலிருந்து நுரை தள்ளிக் கொண்டிருக்கிற பித்தங் கொண்டவனைப்போல் நடக்க வேண்டியிருந்தது. ஆனாலும் அச்சந்தர்ப்பத்தில் அப்படி நடைபெற்ற போதும் இறுதியில் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அவர் அரசாளுகிறார். இன்று உங்கள் வாழ்வில் இப்படியான தீமைகள் நடந்ததா நீங்கள் பயப்படாதிருங்கள். எல்லாவற்றையும் நன்மையாக்குவதற்கு தாவீதின் தேவன் உங்களோடிருப்பாராக. வெற்றியின் நாள்.



என் பிதாவே நீங்கள் தீமைகளை நன்மையாக மாற்றுகிற தேவன். எவ்வளவு தீமைகள் நடைபெற்ற போதிலும் நீங்கள் தாவீதை இஸ்ரவேலின் இராஜாவாக உயர்த்தினீர்கள். நீங்கள் என்னோடிருப்பதால் ஸ்தோத்திரம். வெற்றியை நோக்கி என்னைக் கொண்டு செல்லுங்கள். இயேசுவின் நாமத்தில் ஆமேன்.

---

நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாக்கல் உங்களுக்குக் கிடைக்கும் பலன் முடிவோ நித்திய ஜீவன்

ரோமர் 6:22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

மார்ச் 28

வியாழன்

பெரிய வியாழக் கிழமை

## உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

2 கொரிந்தியர் 01 - 02

**"மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன், நீங்கள் அழுது புலம்புவீர்கள். உலகமோ சந்தோஷப்படும், நீங்கள் துக்கப்படுவீர்கள் ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்"** (யோவான் 16:20)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு மகிழ்ச்சிகரமான நாளாகட்டும் என வாழ்த்துகிறேன். எங்கள் ஆண்டவரான இயேசு சுவாமி அவருடைய சீடரான தோமஸ் என்பவர்க்கு கூறியதாவது நீ என்னை கண்டதினால் விசுவாசித்தாய். காணாமல் விசுவாசிக்கிறவர்களே ஆசீர்வாதம் பெறுவார்கள் அன்று தோமஸ் தேவனை நேரில் முகமுகமாய் கண்டார். தேவன் தோமஸ்கு கூறிய வசனத்தின் விளக்கமென்னவெனில் தேவனைக் காணாது தேவனுடைய நற்செய்தியை ஏற்றுக்கொண்டு தேவன் பேரில் முழுமையாக விசுவாசம் கொண்டு, இன்றும் என் தேவன் என் தேவன் என்னோடு என்று விசுவாசம் வைத்திருப்பவர்கள் உண்மையிலேயே ஆசீர்வாதம் பெற்றவர்கள் என்பதாகும். நீங்கள் தேவனுக்கு சொந்தமானவர்களாகையால் நீங்கள் அதிஷ்டகாரர்கள் என்று எல்லா வேளையிலும் தியானியுங்கள். ஐயோ எனது சீர்க்கேடான நிலை எனது சீர்க்கெட்ட வாழ்வை நீங்கள் கூறாதீர்கள். ஏனென்றால் உங்கள் துர்திஷ்ட வாழ்க்கை அதிர்ஷ்டமாக மாற்றி உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்ற உங்கள் தேவன் வல்லமையுடையவர்.

தேவபிள்ளைகளே, சில வேளைகளில் நாங்கள் எதிர்பார்க்காத பிரச்சினைகள், சஞ்சலங்கள், உபத்திரவங்கள் எங்களுக்கு வருவது தேவனின் சித்ததின்படி நடக்கிறவைகளாகலாம். நான் தாய் சபையில் 18 வருடங்கள் ஊழியஞ்செய்த பிறகு ஒரு நாள் நான் ஜெபிக்கும் போது தேவன் என் உள்ளத்தில் பேசியதாவது ஜோசப் நான் இப்போது உன்னை தனி ஊழியம் செய்ய உன்னைப் பாவிக்கப்போகும் நேரம் வந்து விட்டதால் நீ இப்போதே வெளியே போக ஆயத்தப்படு என்பதாகும். அதன் பின்னர் என்னுடைய ஊழியத்தை விட்டு வெளியேறுதல் எவ்வகையில் நடக்கப்போகிறது என்று தேவனிடத்தில் கேட்டு அவருடைய பாதத்தில் தொடர்ந்து ஜெபித்தேன். தேவன் ஏதொ ஒரு காரியத்தை செய்யப்போகிறார் என்று என்னுடைய ஆத்துமாவில் உணர்ந்தேன். ஆனாலும் எப்படி என நான் அறிந்திருக்கவில்லை. ஆனாலும் ஒரு நாள் என்னொடு என் தாய் சபையில் ஊழியம் செய்கிற சகோதரியொருவர் என்னைக்குறித்து பயங்கரமான ஒரு குற்றச்சாட்டை என்னுடைய ஆத்மீக தகப்பனுக்கு கூறி குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. என்னுடைய ஆத்மீக தகப்பனுக்கு என் மீது உக்கிர கோபம் ஏற்பட்டு என் மனம் அதிகமாய் புண்பட்ட நிலையில் எனது தாய் சபை ஊழியத்தினின்று வெளியேறினேன். வீட்டில் இருந்தே தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தேன். ஜெபத்தின் வேளையில் என்னுடைய முன்னோக்கிய ஊழியப்பாதையில் செல்ல வேண்டிய ஆலோசனைகளைத் தேவன் கொடுத்த போது அந்நிகழ்வு தேவனுடைய சித்ததின்படி நிகழ்ந்தது என அறிந்துக் கொண்டேன்.

தேவன் அப்படியாக செய்து இன்றைய நாளில் தனி ஊழியத்திற்கூடாக என்னை உயர்த்தி என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றினார் உங்களுக்கு கிடைக்கவேண்டிய ஆசீர்வாதம் என்ன என்பதை தேவன் அறிந்திருக்கிறார். மகிழ்ச்சிகரமான நாள்!



என் தேவனே நீங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றும் தேவன். என்வாழ்வில் இருக்கும் பலவிதமான பிரச்சினைகள், உபத்திரவங்கள் நீங்கள் நன்றாக அறிந்தவராக இருக்கிறீர்கள். என்னால் அவற்றிலிருந்து மீள முடியாது என்பதை அறிவேன். பிதாவே என்னை மீட்டுக்கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில் ஆமேன்.

---

நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்கிறார். உன் கிரியைக்குத்தக்க பலனுண்டென்று கர்த்தர் சொல்கிறார்.

எரேமியா 31:16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 29

வெள்ளி

பெரிய வெள்ளிக்கிழமை

தன்னுடைய சிலுவை மரணத்திற்கு மேலாக எங்கள் நன்மைகளை நினைக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

2 கொரிந்தியர் 03 - 04

**"அப்பொழுது இயேசு இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி அவனுடைய காதைத் தொட்டு அவனை சொஸ்தப்படுத்தினார்"** (லூக்கா 22:51)

அன்புக்குரிய தேவனை நேசிக்கிற தேவ பிள்ளைகளே! இணையற்ற இரட்சிப்பை பெற்ற உங்கள் இயேசுவினால் வாழ்த்துகிறேன். இன்று இயேசு சுவாமி சிலுவை பாடுகளில் மரித்த பெரிய வெள்ளிக்கிழமை நாளாகும். அந்த அன்பை சிந்திப்போமானால் தேவன் உங்களிடமும் என்னிடமும் கண்ட நன்மை என்ன? தேவபிள்ளைகளே, எங்கள் மீட்புக்காக தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து என்னை நரகாக்கினையிலிருந்து தன்னுடைய இரத்தத்தை விலைக்கிரயமாக செலுத்தி என்னிடமும் உங்களிடமும் எந்தவித பிரதிபலன், எதிர்பார்ப்பும் இல்லாமல் இப்படியான இணையற்ற அன்பினால் மீட்ட இந்த நாள் எவ்வளவு அருமையானது?

இன்றையத் தினத்தில் தேவன் செய்த அந்த அன்பிற்காக பதில் அன்பு செலுத்துவதே மேலானது என எண்ணுவீர்களானால் இன்று உங்களால் செய்ய முடிந்த ஒரு காரியம் உண்டு. பரிசுத்த லூக்கா 22:51 வது வசனத்தின்படி தனக்கு விரோதமாய் எழும்பிய எதிரிகளிடையில் ஒரு மனிதனின் காதை இயேசுவின் சீடனொருவன் வெட்டியதையும் தனது எதிரியான அந்நபரின் காதில் இயேசு சுவாமி கை வைத்து குணப்படுத்தியதையும் காண்கிறோம். நீங்கள் பாவியாக இருந்த வேளை உங்கள் பாவங்களைக் கழுவி 1 யோவான் 1:7 இன்படி உங்களை பரிசுத்தமாக்கிய உங்கள் அன்பான இயேசு சுவாமி உங்களுக்காக இரத்தஞ்சிந்திய அந்த மாசற்ற அன்பிற்காக நீங்கள் ஏதாகிலும் செய்யுங்கள்.

தேவ பிள்ளைகளே, இன்றைய நாளில் உங்களை அதிகமாக வேதனைப் படுத்திய அல்லது உங்களுக்கு அதிகமான அநீதியான காரியங்களை விளைவித்த உங்களை பொய்ப்பிரச்சாரம் பண்ணி பகிரங்கப்படுத்திய உங்களை இழிவுப்படுத்திய ஒருவர் இருப்பாராகில் நீங்கள் இயேசு சுவாமிக்கு உண்மையாக அன்பாக இருப்பீர்களெனில் இன்றைய நாளில் பதில் அன்பு காட்ட வேண்டுமென உள்ளத்தில் நினைப்பிர்களென்றால், உங்களது முழு உள்ளத்திலும் அவருக்கு மன்னிப்புக் கொடுத்து மன்னித்து சமாதானமாகுங்கள். உங்கள் தேவனாகிய இயேசு சுவாமியின் அன்பும் இரக்கமும் அவர் எமக்காக பாடுப்பட்டு மரித்தததைக்குறித்து அவருக்குச் சொல்வி கொடுங்கள். இன்றைய நாளில் உங்களுக்குச் செய்ய முடிந்த பெரிய காரியமாகும். அந்த நபர் அல்லது பெண் தூரத்திலிருக்கும் நபர் என்றால் ஒரு மனித்தியாலம் முழங்கால் படியிட்டு ஜெபித்து மன்னிப்புக் கொடுங்கள். அப்படி செய்யும் வேளை 3வது நாள் மரித்தவரிடையில் உயிர்த்த தேவனான இயேசு சுவாமி மீண்டுமாக எழும்பிய வேளை முழு உலகமும் பெற்ற சந்தோஷம், வெற்றி, ஆகியவைகள் உங்களுக்குள்ளும் கிரியை செய்யும். இயேசு சுவாமி மரித்தார் ஆனாலும் இன்றும் உங்களுக்குள் ஜீவனுள்ளவராக இருப்பதை மறந்துவிடாதீர்கள். இன்று உங்களுக்கு வெற்றியின் நன் நாள்!



என் அன்பு இயேசு சுாமி எங்களுக்க உங்களைப்போல் மற்றவர்களை மன்னிக்கும் பரந்த மனசை தாருங்கள். மரித்தவர்களிடையே உயிர்த்தெழுந்த உங்களுக்க இயன்றவரை ஊழியம்செய்ய பெலன் தாருங்கள். ஆமேன்.

---

பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபை வரமோ
நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகிய நித்திய ஜீவன்
ரோமர் 6:23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 30

சனி

**எல்லாம் முடிந்தது என்ற இயேசு சுவாமி !**

இன்றைய வேதவாசிப்பு

2 கொரிந்தியர் 05 - 06

**"இயேசு காடியை வாங்கின பின்பு முடிந்தது என்று சொல்லி தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புகொடுத்தார்."** (யோவான் 19:30)

தேவனுடைய இரத்தத்தினால் பாவங்கள் கழுவப்பெற்று, இயேசுவின் அன்பைப்பெற்று ஜீவிக்கிற என் அருமையான தேவப்பிள்ளைகளே, உங்களுக்கு என் அன்பின் காலை வணக்கம். அன்பான தேவபிள்ளைகளே, உங்களினதும் எனதும் படைப்புகளின் தேவன் உங்களுக்கும் எனக்கும் உலகத்தவருக்கும் காட்டிய அன்பு என்னவெனில் தேவன் மனுவுருவெடுத்து இறங்கி எங்கள் எல்லோரினது பாவங்களையும் அவர் தன் மேல் சுமந்துகொண்டதாகும். ஆகவே தேவபிள்ளைகளே, நாங்கள் இயேசுவைப்பற்றி தெரிந்துகொள்ளு முன்னரே நாங்கள் தெரிந்துகொண்டு செய்த பாவங்கள் தெரியாமல் செய்த தவறுகள், தவறான கிரியைகள் எல்லாவற்றை தேவன் தன் சரீரத்தினால் சிந்தப்பட்ட பரிசுத்த இரதத்தினால் கழுவி பரிசுத்தமாக்கி விட்டார்.

பரிசுத்தம் என்று கூறப்பட்டதற்கு அர்த்தம் என்னவெனில் தேவன் கன்னிகையின் வயிற்றில் தேவ ஆவியோடு பிறந்து தேவனானவர் பரிசுத்த மனிதராக 33 ½ வருடங்கள் வாழந்தார் என்பதாகும். இவ்வண்ணமாக எங்கள் எல்லா பாவங்களின் காரணமாக தேவன் நேற்றைய நாளில் விலைக்கிரயம் கொடுத்து முடிந்துவிட்டபடியால் தேவனருகில் வந்து தேவன் பேரில் விசுவாசம் வைக்கிற எல்லா மனிதர்களும் எல்லா பாவங்களிலிருந்தும் முழுமையாக விடுதலையடைந்துள்ளார்கள்.

இதை வாசிக்கிற நீங்கள் இன்றைய நாளில் உங்கள் வாழ்க்கையில் ஏதாவதொரு தவறு நடந்ததைக்குறித்து நினைத்து துக்கத்தோடு இருக்கிறீர்களா? அதைக்குறித்து நினைத்து உள்ளத்தில் வேதனைப்படுகிறீரகளா? இவ்வண்ணமாக உங்களை வேதனைப்படுத்தி மீண்டுமாக உங்களைத் தவறு செய்வதற்கு தூண்டுகிற சாத்தானுக்கு இடங்கொடாது உடனடியாக மனஸ்தாபப்பட்டு ஜெபியுங்கள். நேற்றைய நாளில் இயேசு சுவாமி உங்களுக்காக சிலுவைதனிலே பட்ட பாடுகளை நினைத்துப் பாருங்கள். தேவனுடைய சரீரத்திலே சாட்டையடிகளினாலே ஏற்பட்ட காயங்களை எண்ணிப்பாருங்கள். நேற்றைய நாளில் உங்களுக்காக தேவன் பட்ட எல்லா வேதனைகளையும் நினைத்து தேவனின் பாதத்தில் விழுந்து மன்னிப்புப் பெற்றுக் கொள்ளுங்கள். தேவன் இரத்தத்தால் உங்களை மீண்டுமாக கழுவுவதை உணர்ந்து கொள்வீர்கள்.

அப்படியே உங்கள் சரீரம் புதிதாக்கப்படுவதை உணர்வீர்கள். உங்கள் கண்ணீரைத் துடைத்து மீண்டுமாக இயேசு சுவாமி தனது நீதியின் வலது கரத்தினால் உங்களை உயர்த்துவாராக! பயப்படாதிருங்கள். தைரியமாயிருங்கள்! உங்கள் உள்ளத்தில் சஞ்சலங்கள், துக்கங்கள் வைத்து உங்களை அழிப்பதற்கு எதிரியான சாத்தானுக்கு இடம் கொடாது இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டு இரத்தப்பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். இன்றும் உங்களுக்கு வெற்றிகரமான நாள்!



**என் தேவனே! என்னை மன்னித்து என்னுடைய பாவங்களைக் கழுவி பரிசுத்தமாக்கினபடியால் உங்களுக்குக் கோடி ஸ்தோத்திரங்கள். மீண்டும் நான் பாவத்தில் விழாதபடி உங்கள் நீதியின் வலது கரத்தினால் என்னைத் தாங்கி நடத்துங்கள். இயேசுவின் நாமத்தில் ஆமேன்.**

**அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை, கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்**

**சங்கீதம் 37:24**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

மார்ச் 31

ஞாயிறு

உயிர்த்தெழுந்த ஞாயிறு

## மரணத்தை வென்ற இயேசு கிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு


2 கொரிந்தியர் 07 - 08

**"அவர் இங்கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்"** (மத்தேயு 28:6)

அன்பான தேவபிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தினால் வெற்றிகரமான நாளாக வேண்டும் என நான் வாழ்த்துகிறேன். இன்றைய நாள் எங்களுக்கு மிகவும் விசேஷித்த நாளாகும்.. ஏனென்றால் நேற்றைய நாளில் கல்லறையில் மரித்த சரீரமாக இருந்த உங்களது எனது இயேசு சுவாமி இன்றைய நாளில் வெற்றியோடு மரணத்தை வென்று மீண்டுமாக உயிர்த்தெழுந்தார். உலகை மீட்பதற்கு வந்த தேவன் உங்களையும், என்னையும் தேவனின் பிள்ளைகளாக தெரிந்தெடுத்து வேறுபடுத்திக் கொண்டபடியால் எல்லா மனிதரையும் விட நீங்களும் நானும் அதிஷ்டசாலிகள்.

தேவபிள்ளைகளே, இயேசு சுவாமி மனிதனை நேசிப்பதற்கு உலகத்திற்கு வந்து யூத ஜனங்களால் அநேக அடிகள், உபத்திரவங்கள், அவமானம், வேதனைகள், அனுபவிக்க நேரிட்டது. அவர்கள் இயேசு சுவாமியை இவ்வண்ணமாக துன்புறுத்திய வேளைகளிலும் தேவனை விசுவாசித்து பின்பற்றிய சிலர் அன்று இருந்தவர்கள் இயேசு சுவாமியின் மரணத்தின் பின் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் சிதைந்து உடைந்து விழுந்து விட்டதாக எண்ணினார்கள். ஏனென்றால் தேவன் மீண்டுமாக உயிர்த்தெழுந்தபின்பு "எம்மாவுஸ்" என்னும் கிராமத்துக்கச் செல்லுகையில் சீடர்கள் இரண்டு பேரைச் சந்தித்தார். அவர்கள் இயேசுவைக்குறித்து, அவருடைய மரணத்தைக்குறித்து அவரோடு பேசினார்கள். அவர்கள் இயேசுவிடம் கூறியது நாங்கள் இஸ்ரவேலை இயேசு தான் மீட்டுக் கொள்வார் என்று நினைத்தக்கொண்டிருந்தோம். ஆனாலும் தேவன் இறந்து இன்றைக்கு 03 நாட்கள் ஆகிவிட்டது என்று அவர் இயேசு தான் என்று அறியாது கூறினார்கள். ஆனால் அது அவர்களது கவலைக்கிடமான வெளிப்பாடாகும்.அவர்களின் எதிர்பார்ப்புக்கள் சிதைந்து விழுந்து விட்ட நிலையில் வேதனையோடு இருந்தார்கள்.

தேவபிள்ளைகளே, இன்று எங்கள் தேவன் இயேசுசுவாமி மரணத்தை வென்று மரித்தவர்களுக்கிடையில் எழுந்து மீண்டும் சதாகாலமும் ஜீவனுள்ளவராக எங்கள் மத்தியில் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிறார். தேவன் தனக்கு இவ்வளவாக கொடுமைகளை இழைத்த மனிதரை மீட்கும்படியாக மரணத்தினின்று மீண்டும் எழுந்து இந்த பூமியில் கண்களுக்குப் புலப்படாத தேவ ஆவியாக ஜீவனுள்ளவராக கிரியை செய்துக்கொண்டிருப்பது தேவன் எங்கள் மீது வைத்திருக்கும் ஈடு இணையற்ற அன்பின் நிமித்தமேயாகும். ஆகையால் எமது ஆத்மீக பயணத்தில் முன்னோக்கிச் செல்ல தேவன் இரவு பகலாக எங்களுக்கு ஒத்தாசை உதவிகள் செய்து எங்களோடு இருக்கிறார். நாங்கள் தேவனை அழைக்கிற எத்தருணத்திலும் தேவன் மறையாதவண்ணம் பதில் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இயேசு சுவாமி உங்களுக்கு மிகுந்த அளவுக்கடந்த அன்பு செய்கிறபடியால் உங்களுக்கு அனைத்திலும் வெற்றி பெற்றுத்தருவாராக! நீங்கள் இயேசுவை மாத்திரம் பார்த்து முன்னோக்கி பயணியுங்கள். உங்கள் வாழ்வின் சகல காரியங்களையும் வாய்க்கப்பண்ணுவார். இன்று வெற்றிகரமான நாள்.



**என் பிதாவே உங்கள் புத்திரரான இயேசு சுவாமிக்காக நன்றி. நீங்கள் தேவனை மரித்தவர்களிடத்தில் உயிர்த்தெழச் செய்தீர். அப்படியே பாவத்தினால் மரித்த என்னையும் இயேசுவோடு எழும்பச் செய்ததினால் ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் ஆமேன்.**

---

அன்றியும் இயேசுவை மரித்தோரிடத்திலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ரோமர் 8:11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




அன்பார்ந்தவர்களே! எங்கள் அன்பு தேவ பிதாவானவர் தன் சிருஷ்டிப்பான மனிதர்கள் பாவத்தில் வீழ்ந்து நீதி, உண்மை ஆகியவற்றை கைவிட்டு அநீதியான பாதையில் செல்கின்றதனால் மனிதனின் பாவங்களுக்கு தண்டனை அதிகதிகமாக பெருகுகின்ற படியால் தேவன் மனிதர்களுக்காக இரக்கப்பட்டு அவர்களுக்கு பரிகாரம் செய்ய வேண்டுமென நோக்கம் கொண்டார். அதன் பிரதிபலனாக தனது அரவணைப்பில் இருந்த ஒரேபேரான குமாரனை உலகிற்கு அனுப்பி எங்கள் பாவத்தின் காரணமாக அவரின் உயிரைப் பலியாக் கொடுக்க பரத்திலிருந்து கிரிகை செய்தார்.

தேவப்பிள்ளைகளே! மனிதன் அனுபவிக்கும் வேதனைகள் இயேசுவுக்கு இல்லாதிருந்திருக்கலாம் என்று நாங்கள் நினைக்கக் கூடும். இயேசுக்கிறிஸ்து ஒரு மனிதன், இப்படிப்பட்ட பாடுகளினால் எவ்வளவு வேதனைகளை அனுபவிப்பானோ அந்த அளவு வேதனைப்பட்டு தனது தியாகத்தை செய்து முடித்தார். இதன் நிமித்தமாய் எங்களுக்கு இலவசமாக தேவனுக்கூடாக இரட்சிப்பு கிடைத்தது. இது இயேசுக்கிறிஸ்துவின் மாபெரும் பரித்தியாகம் ஆகும். இயேசுக்கிறிஸ்துவின் கொடூரமான மரணத்தினாலே நாம் சுகமான, சந்தோசமான, சமாதானமான வாழ்க்கை வாழ்கிறோம் என்றால் மிகையாகாது. ஆகையால் ஆவிக்குரிய பிள்ளைகளான நாங்கள் அனைவரும் முழு உள்ளத்தோடு உணர்ந்து தேவனின் மரணத்தை நினைவு கூர்ந்து வைராக்கியத்தோடு தேவனுக்காக ஏதாவதொரு காரியம் செய்தேயாக வேண்டும்.



ஆகையால் இயேசுக்கிறிஸ்து எங்களுக்காக அனுபவித்த பாடுகளையும் கோர மரணத்தையும் கொல்கொதா மேட்டில் அன்று நடந்த அந்தக்காட்சியையும் மனக்கண்களில் நிறுத்தி இயேசுக்கிறிஸ்துவே நீங்கள் எனக்காக உங்களையே தியாக பலியாக ஒப்புக்கொடுத்து பலியானீர்கள் என்பதைத் தியானிக்கிறேன். இந்த தியாகத்தின் நிமித்தமாய் நான் பெற்ற இரட்சிப்பைக் குறித்து மகிழ்கின்றேன். என்று கூறி இன்றைய நாளில் ஒரு பொருத்தனை செய்து உங்கள் உணவு வேளைகளை, அல்லது விருப்பமான உணவுகளை அல்லது ஏதாவதொரு காரியத்தை விட்டு விடுதாகவோ அல்லது ஒரு புதிய காரியத்தை உங்கள் ஆத்துமீக ஜீவியத்தில் சேர்த்துக் கொள்வதாகவோ உங்களை அர்ப்பணியுங்கள். உங்களது ஒரு சிறு அர்ப்பணம் கூட தேவனுக்கு முன்பாய் மிக அருமையானதாய் இருக்கும். ஏனெனில் மனிதர்களுக்காக எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்தார். எவ்வளவு உபகாரங்களைச் செய்தார். எவ்வளவு அநுக்கிரகங்களைக் கொடுத்திருக்கின்றார்! இறுதியாகத் தன்னையே ஜீவபலியாக கோர மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். இவைகளை ஒரு தனி மனிதனாகவே நிறைவேற்றினார்.

நீங்களும் அவைகளைக் குறித்து சிந்தித்து தேவனோடு உறவாடுங்கள். அவரிடம் பேசுங்கள். "அப்பா நீர் தாகத்தோடு இருந்தபோது நான் உம்மோடு இருந்திருந்தால் தண்ணீர் தந்திருப்பேன். நீங்கள் பாரமான சிலுவையோடு நடந்தபோது உம் பாரத்தை நானும் சுமந்திருப்பேன். ஆணிகளால் அறையப்பட்ட வேளையில் நான் அருகில் இருந்திருந்தால் கத்தி கதறி அழுதிருப்பேனே" என்று கூறி அன்பின் வெளிப்பாட்டை அவருக்குத் தெரிவியுங்கள். அவருடைய பாதத்தில் அமர்ந்து ஜெபியுங்கள். இன்றும் தேவன் எங்கள் மத்தியில் ஜீவனுள்ளவராய் கிரிகை செய்துக்கொண்டிருக்கிறார். உங்கள் எல்லா அர்ப்பணிப்புக்களும் தேவனுக்கு முன்பாய் பெறுமதி மிக்கது. அருமையானது. சிறு காரியமானாலும் முழு உள்ளத்தோடு செய்யுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"...உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம்முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை."



ஏசாயா 64:4

இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக !!!

## 18 வது வெளியீடு

தேவ பிள்ளைகளே,

ஜீவ மன்னா தின தியானங்கள் 18வது வெளியீட்டை வெளியிடுவதற்காக தேவனால் கிடைக்கப் பெற்ற மகாப் பெரிய கிருபைக்காக நன்றி செலுத்துவதோடு அவருக்கு மகிமை உண்டாவதாக என வாழ்த்துகின்றோம். இந்த ஜீவ மன்னாவானது உங்களுக்கு தேவ ஆசீர்வாதமாக அமைவதோடு தேவனுடைய ஆத்மீக வெளிப்பாடுகளையும் கொண்டுள்ளது. அநேக ஆத்மீக பிள்ளைகள் தாங்கள் சில காரியங்களை தங்கள் ஆலோசனைகளின்படி ஆயத்தப்படுத்தி விட்டு அதை தேவனின் சித்தப்படி செய்தோம் எனக் கூறுவார்கள். தேவனின் முன்னிலையில் உபவாசத்தோடிருந்து ஜெபித்து தேவ ஆவியானவரின் மூலமாக அவர் கொடுக்கின்ற ஆலோசனைகளின் பிரகாரம் செயல் படுத்தப்படுகின்ற போது அக்காரியங்கள் மிகவும் பலன் கொடுப்பதாக அமைகின்றன. சிறிய கடுகு விதையாக விதைக்கப்பட்ட இந்த ஜீவ மன்னா தின தியானங்கள் ஜீவ விருட்சமாக வளர்ந்து அநேகரை ஆசீர்வாதத்தில் நிரப்பியது மட்டுமின்றி கர்த்தருக்குள் கனி கொடுப்பவர்களாக மாற்றியும் உள்ளது. சிறிய கைக்குழந்தையாக உங்கள் கரங்களுக்குக் கிடைத்த இந்த தின மன்னா தியானங்கள் இப்போது சௌந்தரியமான இளவரசியாக வளர்ந்துள்ளது.

ஜீவ மன்னா மூலமாக வாழ்க்கையில் மனந்திரும்பி அநேக பிள்ளைகள் மகிழ்ச்சிகரமாக வாழ்கின்றபடியால் நான் அவ்வண்ணமாக கூறுகின்றேன். அப்படியே ஆத்மீகத்தில் பின்மாற்றமடைந்து சோர்வடைந்து போன ஆவிக்குரிய பிள்ளைகளின் வாழ்க்கை இதற்கூடாக மீண்டுமாக மறுமலர்ச்சியடைந்துள்ளது. எங்களுக்குக் கிடைக்கின்ற கடிதங்களுக்கூடாக நாம் அறிந்துக்கொள்ளும் ஒரு உண்மை என்னவென்றால் அவர்களது வேதனையான வாழ்க்கைக்கு மன்னா தியானங்கள் பெரும் ஆறுதலைக் கொடுத்துத் தேற்றுகிறது. இதைத் தவிர அவர்களுக்கு இவ்வுலகில் வேறு எந்த வகையிலும் இத்தகையான ஆறுதலைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதாகும்.

பாலைவனமாக வறண்டு காய்ந்த நிலத்தில் காணப்பட்ட வளமான நீர் வீழ்ச்சியைப் போல் செழிப்புடனிருந்து சிறுமைப்பட்டு, சிதைந்துப்போனவர்கள் வாழ்க்கையில் ஜீவ மன்னாவிற்கூடாக மன ஆறுதல், சமாதானம் பெற்றுத் தேவனின் அன்பில் நிறைந்துள்ளார்கள் ஜீவ மன்னா இயேசுவுக்குள் அவர்களைக் கிட்டிச் சேர்த்தபடியால் முன்பிருந்ததிலும் பார்க்க இயேசு எனும் மீட்பருக்குள் கிட்டிச் சேர்ந்திருப்பதும் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற்று மற்றவர்களுக்கு அவர்களே இயேசுவின் அன்பை வெளிப்படுத்திக் காட்டுவதும் எவ்வளவு பெரிய பாக்கியம். ஒரு நாட்டின் அபிவிருத்தி அங்கே வாழும் பணக்கார மனிதர்களினாலல்ல சிந்தனையில் செய்கையில் ஆத்மீகத்தில் உயர்ந்தவர்கள் வாழ்வதனாலாகும். இப்படியாக உறுதுணை புரியும் ஜீவ மன்னா தின தியானங்கள் இன்று எல்லோரினதும் புகழைப் பெற்றுள்ளது. இப்பொழுதும் நீங்கள் அங்கத்தவராக இருப்பீர்கள் என்றால் நீங்கள் ஆசீர்வாதம் பெற்றவர்கள். இல்லையென்றால் நீங்கள் இன்றே ஜீவ மன்னா தின தியானங்களை வாசித்து உங்கள் வாழ்க்கையை பரிசுத்த ஆவியினால் அலங்கரித்துக்கொள்ளுங்கள்.

**வறண்ட வாழ்வினை வளமாக்கும் ஜீவ மன்னா !**

போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவு இலக்கம்:- CME/003/12/NPO


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.

011-2334865 0714-922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14. ஜீவ மன்னா குட் நவலோ பிரிண்டர்ஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.